# மாணிக்கம்

ஆசிரியர்: திருமதி சரோஜினி கைலாசபிள்ளை B.Sc. (Cey)

ஆடி 75
விலை ரூ 1.25



சின்னச் சின்ன இழை
பின்னிப் பின்னி வரும்
சித்திரக் கைத்தறிச்
சேலையடி....

# கைத்தறி

உத்தரவாதம் பெற்ற
ஆடைகளின் சின்னம்

- ஷேர்ட்டிங்
- வேஷ்டி
- சாரம்
- சாரி

முதலியவற்றின்
முன்னணி உற்பத்தியாளர்கள்



# சிவகுமார மில்ஸ்

15/5. சாந்தி றோட், ஹேந்தளை, வத்தளை.

தலைமை
அலுவலகம்.
'என் கே'
140. ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு.13
தொலைபேசி
:32988

# நினைவு அலைகள்

திருமதி சரோஜினி கைலாசபிள்ளை

## (10)

கலியாண நாளும் நெருங்கி விட்டது. காலை 11 மணிக்குத் திருமணம். திருமண வைபவத்திற்கு வீட்டில் இருந்து பத்துக் கட்டைக்கு அப்பால் உள்ள சிவன் கோவிலைத் தேர்ந்து எடுத்திருந்தார்கள்.

முதல் நாள் இரவே மணப் பெண்ணை திரு. ஆனந்தன் வீட்டிற்குக் கூட்டிச் சென்று விட்டார்கள். பெண்ணை அங்கு இருந்துதான் கோவிலுக்கு அழைத்துச் செல்வதாக ஏற்பாடு.

எங்கள் ஊர் சைவ முறைப்படி மாப்பிள்ளைக்குத் தோய வார்த்து, தலைப்பாகை வைத்து கோவிலுக்கு மாப்பிள்ளைத் தோழன், கிட்டிய சொந்தக்காரர்கள் உட்படச் சோடனைக்காரில் புறப்பட்டார்கள்.

மணப் பெண்ணின் சோடனைக்கு ஏற்ற பூக்கள், மாலைகள் மணவறையில் மாலை மாற்ற, மாலைகள் முதல் நாளே ஏற்பாடு செய்திருந்தோம். இங்கு நாம் பண்டாரியிடம் அல்லாவிட்டால் பூக் கடையில் மாலைக்கு ஆடர் கொடுக்கின்றோம். அங்கும் இதே போல பூக்கடையிலேயே ஆடர் கொடுத்து மாலைகள் வாங்கினோம். இந்தக் கடைகளை நடாத்துபவர்கள் இந்தியத் தமிழ் மக்களே. மல்லிகை, முல்லை, செவ்வந்தி எது வேண்டுமோ பெற்றுக் கொள்ளலாம்.

பெண் வீட்டுக்காரராகிய நாங்களே பெண்ணை அலங்கரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம். 'மாணிக்கத்தின் ஆசிரியை தனது கைவரிசையை மணப் பெண்ணின் தலைச் சோடனையில் காட்டினார். அன்றி திருமதி பாலசிங்கமும், திருமதி குலசேகரமும் அழகாக பெண்ணுக்குப் பட்டுச் சேலை கட்டி நகைகள் இட்டனர். திருமதி ஆனந்தன் (பொம்பிளைத் தோழி) எல்லாவற்றிற்கும் உதவி புரிந்து மெட்டாக்கு இட்டு கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார். நாமும் செல்கின்றோம்.

சிவன் கோவிலில் மிக விசாலமுள்ள கல்யாண மண்டபம் உள்ளது. அங்கு அழகாக மணவறை வைத்துச் சோடனைகள் செய்திருந்தார்கள். மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இருந்து எல்லா உறவினர்களும், நண்பர்களும் வந்து

கூடியிருந்தார்கள். பெங்களூர்ப் பட்டும் காஞ்சிபுரமும் மணிப்புரியுடன் போட்டி போட்டன. கனகாம்பரமும் மல்லிகையும் பெண்களின் தலைகளில் இருந்து புன்னகை புரிந்தன. பதக்கமும் அட்டியலும் பளபளத்தன. கோட்டும் சூட்டும் என்னை விட எதில் உயர்ந்தது என்று பட்டு வேட்டி படபடத்தது. எல்லாமே ஒரே கோலாகலமாக இருந்தது. கெட்டி மேளம் முழங்குகின்றது. மணமகனுக்குக் காலுக்குத் தண்ணீர் ஊற்றி மாப்பிள்ளைத் தோழன் மோதிரம் பெறுவதிலிருந்து கூறை உடுத்துத் தாலி கட்டி, அம்மி மிதித்து அருந்ததி காட்டி, பால் பழம் சாப்பிடும் வரை எல்லாமே எங்கள் ஊர் திருமணம் போல் இனிதாக நடந்தேறியது.

மணமக்களை அறுகரிசி இட்டு ஆசீர்வதித்தோம். வந்தவர்களுக்கெல்லாம் உணவு கொடுத்தனர். உண்டு கழித்து கோவிலுக்கு மணமக்களைக் கூட்டிச் சென்று கடவுளின் ஆசிபெற்று வீடு திரும்புகின்றோம். கலியாண வீடு ஒரே அமளிதான். பெண்பார்க்க வருபவர்கள் கூட்டமும் மாப்பிள்ளையின் சினேகிதர்கள் கூட்டமும் ஒரே கொண்டாட்டம்.



மணமகனுக்குப் பாலறுகு வைக்கிறார்கள்

மாப்பிள்ளை வீட்டில் நாலாம் சடங்குக்கு விருந்து கொடுப்பதற்கு திட்டம் தீட்டுகின்றனர். கலியாணம் முடியும் வரை ஊர் சுற்றிப் பார்க்கும் ஆவலைத் தடைபோட்டு வைத்திருந்த நாங்கள் ஊர் சுற்றுவதற்குத் திட்டம் வகுக்கின்றோம். திருமணம் நல்லபடியாக முடிந்தது. நாமும் ஊர்சுற்றக்கிளம்பி விட்டோம்.

(வளரும்)

---

குறிப்பு: மாணிக்கம், மதனன் குறுக்கெழுத்துப் போட்டி இல. 7 30. 6. 75ல் முடிவடைகிறது என்றாலும் 31. 7. 75 வரை அது நீடிக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு அறியத் தருகிறோம்.

'நவரசம்' எமது அடுத்த இதழில் இடம்பெறும்,

மாணிக்கம் நடத்திய மாணிக்கம் பஞ்சாங்கக் கலண்டர் போட்டியில் பரிசு பெற்ற 1000 அதிர்ஷ்ட சாலிகளது பெயர் முகவரிகள் இந்த இதழிலிருந்து தொடர்ந்து மாணிக்கத்திலும், மதனனிலும் பிரசுரமாகும். 'மதனனில் பிரசுரமாகும் பெயர்கள் மாணிக்கத்திலும் 'மாணிக்கத்தில் பிரசுரமாகும் பெயர்கள் 'மதனனிலும் பிரசுரமாகாது. போட்டியில் கலந்து கொண்ட நேயர்கள் எமது இரு பிரசுரங்களையும் வாங்கி முடிவுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.

போட்டியில் முதல் பரிசு பெற்றவரது முகவரியும் புகைப்படமும் எமது அடுத்த இதழில் வெளியாகும். போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

1. இ. சந்திரசேகரம் c.o நா. இளைய தம்பி. அம்மன் கோவில் வீதி, கல்முனை-1.
2. செல்வன் பி. கிருபாகரன் c.o ஆர். பி. ஹரன் கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
3. தா. ஜேதீசன் c.o V. A. கோபாலசிங்கம், பூநகரி, வாடியடி.
4. டீ. வேலுப்பிள்ளை J. P. வல்வெட்டித்துறை.
5. கே. எம். அபூபக்கர் V. V. இறக்காமம்.
6. செல்வன்: கோ. பஞ்சலிங்கம், கோவிலடி, புலோலி தெற்கு, புலோலி.
7. திரு. மெ. இராசமணி, 34/2, மார்கட் ரோட், மட்டகளப்பு.
8. கே. கருணாநிதி, தோம்புதர் வீதி, பாண்டிருப்பு-1. கல்முனை.
9. சி. நமசிவாயம், ஆ. மு. குடியிருப்பு, காளிகோயில் வீதி, செங்கலடி.
10. எஸ். அருட் பிரகாசம், ஆறுமுகத்தான் குடியிருப்பு, செங்கலடி.
11. எஸ். எம் அமீர்ஜஹான், மே பா பைஸல் ஸ்டோர்ஸ், தலைமன்னார் பியர்.
12. க. சுப்பிரமணியம் c.o நடராஜா ஸ்டோர்ஸ், 7ம் கட்டை, தெபத்தை S. P. O.
13. எஸ். எஸ். ராமனாதன், நாராங்கெல்ல, பதுளை.
14. ஏ. ஹக்கீம் லெப்பை, 226, மத்திய வீதி, திருகோணமலை.
15. எம். எம். எஸ். மோகன சுந்தரம் K. M. G. M. கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.
16. எஸ். வி. தங்கராஜா, 24, கண்டி ரோட், நுவரெலியா.
17. எம். முருகுபிள்ளை 502, திருமலை வீதி, ஊரணி மட்டக்களப்பு.
18. வி. இராமச்சந்திரன், c.o ஈ. வி. கார்த்திகேசு, 301, மெயின் வீதி, பசறை.
19. கே. எஸ். ஆனந்தன், பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
20. வ. செல்வநாதன், துளாயில் பிள்ளையார் வடக்கு, அல்வாய் மேற்கு. அல்வாய்.
21. த. சுப்பிரமணியம், ஆரயம்பதி-1, காத்தான்குடி.
22. செ. செல்வராகினி. c.o Dr, தம்பையா, சுழிபுரம்,
23. மா. மருதமுத்து. முறுக்கு ரம்பொடை தோட்டம், ரம்பொடை.
24. பொ. வரதராஜா c.o 21, வ. பொன்னம்பலம், புத்தூர் கிழக்கு, புத்தூர்,
25. பி. நாகலிங்கம், டெல்ரா சவுத், புசல்லாவை,
26. செல்வி பி, சரோஜா, 55, நீராவியடி 1ம் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்,
27. ஆ. ஆறுமுகம், தும்பளை, அண்ணமார் கோவிலடி, பருத்தித்துறை.
28. சு. சின்னத்துரை, ஆலயவீதி, 3ம் வட்டாரம், மூதூர்.
29. சோ. சிவபாலன், இடது கரை (36 ஏக்கர்) முத்துஐயன் கட்டு.
30. ந. பாலசிங்கம், செங்குந்தா வீதி, முள்ளியவளை,
31. பொ ன். பொன்ராசா, வலித்தூண்டல், கீரிமலை.
32. திருமதி. டி. ஆனந்தகோபன் c.o Dr. எஸ். ஆனந்தகோபன், மனநோயாளர் வைத்தியசாலை, அங்கொடை.
33. ஏ. ஒலிவர், ஓரியன்டல் இன்டஸ்ரீஸ், உன்னஸ்கிரிய P. o.
34. திரு. கே. சுரேந்திரா, 132, கொழும்பு ரோட், நீர்கொழும்பு.
35. எம். டபிள்யூ. ஜாமியத்தும்மா, ஹவுஸ் ஸ்கீம், கல்பிட்டி.

# மாணிக்கக் களஞ்சியம்

ஈழத்தின் பெருமைமிக்க கலைஞர்கள், இலக்கியகர்த்தாக்கள், முக்கிய பிரமுகர்கள் அனைவரையும் எமது கலைவிழாவுக்கு அழைப்பதற்காக எமக்கு அவர்களது முகவரிகள் தேவையாக இருந்தன. அவற்றைப் பெறுவதற்காக நாம் 'வரதர்' வெளியீடான பலகுறிப்பு பிரதி ஒன்றினைப் புரட்டினோம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இறுதியாக வெளிவந்திருந்த அப்பிரதியில் குறிப்பிட்டிருந்த முகவரிகளில் பல மிகப்பழையதாக இருந்தன. பிரமுகர்களில் பலர் இறந்தும் விட்டிருந்தனர். பல இலக்கிய கர்த்தாக்கள், பிரமுகர்களின் பெயர்கள் இடம் பெற்றும் இருக்கவில்லை. இப் பிரசுரத்தைத் தவிர இதைப்போன்று வேறு எதுவுமே தமிழில் வெளிவரவில்லை. இது மிக வருந்தத்தக்க விஷயம்.

உதாரணமாக ஆங்கிலத்தில் எவ்விடயம் பற்றியாவது அறியவேண்டுமானால் பெர்குஸன் டைரக்டரியை (FERGUSAN DIRECTORY) புரட்டலாம். சிங்கள மொழியிலும் அதே போன்ற பொக்கிஷங்கள் வருடம் தோறும் வெளிவருகின்றன. ஆனால் தமிழினத்திற்கு இப்படியான ஒன்று இல்லையே என்று நினைத்தபோது எமது நெஞ்சம் வேதனை அடைந்தது.

நாமே இந்த முயற்சியில் ஈடுபட்டால் என்ன என்னும் அவா ஏற்பட்டது. மாணிக்கம் மதனன் மற்றும் மாணிக்கப் பிரசுரங்கள், மாணிக்கக் கலண்டர்கள் ஆகியவற்றை வெளியிடும் எமக்கு ஆதரவினை அளிக்கும் தமிழ்மக்கள், இவ்விஷயத்திலும் பரிபூரண ஆதரவை அளிப்பார்கள் என்னும் நம்பிக்கை மட்டுமல்ல — இந்த முயற்சிக்கு போதிய உதவி அளிக்க எந்தத் தமிழனும் பின்வாங்கமாட்டான் என்னும் நம்பிக்கையும் எமக்கு உண்டு.

- கல்வி, மொழி, அரசியல் கலாச்சாரம், பொருளாதாரம், இலக்கியம், மருத்துவம், வர்த்தகம். சமயம், சமூகம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி, பத்திரிகை ஆகிய துறைகளில் பெரும் பணியாற்றிய தமிழ்ப்பெரியார்களின் பெயர்கள், சாதனைகள், வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவை.

- ஒவ்வொரு ஊரிலுமுள்ள கோவில்கள், கிறீஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், ஆகியவற்றின் படங்கள் வரலாறுகள், அவற்றின் ஆரம்பகர்த்தாக்கள், தர்மகர்த்தாக்கள், வழிபாட்டு உற்சவ தினங்கள், மற்றும் புகழ்பெற்ற சம்பவ நிகழ்ச்சிகள் ஆகியவை.

- பாடசாலைகள், கல்விக்கூடங்கள், மருத்துவ நிலையங்கள், மருத்துவர்கள், சனசமூக கிராம முன்னேற்ற நிலையங்கள் — அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட — பாடுபட்டுவரும் சேவையாளர்கள் ஆகியோரது விவரங்கள்.

- கிராமியக் கலைஞர்கள் மற்றும் முத்தமிழ் வல்லுநர்கள், இலக்கிய மேதைகள், பட்டதாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என்பவர்கள் பற்றிய விவரங்கள்.

— ஆகியவற்றையும்

இன்னும் பல சிறப்பு அம்சங்களையும் அதிக அளவு புகைப்படங்களுடன் அகரவரிசைப்படி — ஊர் வாரியாக — தொகுத்து தமிழினத்துக்குப் பெருமை தேடித்தரும் பொக்கிஷமாக வெளியிட வேண்டும் என்பது எமது பேரவா...

இப்பணிக்கு பல ஆயிரக்கணக்கில் செலவு செய்து விடயங்களைச் சேகரிப்பது மட்டுமல்ல இதற்காக பல ஊழியர்களை வேலைக்கு அமர்த்தவேண்டிய நிலையும் ஏற்படும்.

மாணிக்கத்தின் மீது அக்கறை கொண்டு எமக்கு அவ்வப்போது பேராதரவினை வழங்கி வரும் அபிமானிகள் அனைவரும் இதனை வெளியிடுவதற்கு தமது ஒத்துழைப்பை வழங்குவது மட்டுமல்ல, இப்பெரும் பணிக்கு ஏற்படும் பொருட்செலவில் ஒரு பங்கினையாவது பொறுப்பேற்க வேண்டுமென தமிழின் மீதுள்ள அபிமானத்தால் கேட்கின்றோம்.

இப்பணிக்கு நாம் குறைந்தபட்சம் ஆரம்பத்தில் 30,000 ரூபாய்களுக்கு மேல் செலவிட வேண்டியிருக்கும்.

வர்த்தகப்பிரமுகர்களிடமிருந்து விளம்பரங்கள், தமிழ் அபிமானம் கொண்டோரது நன்கொடைகள், தமிழ் எம். பிக்களின் பேருதவிகள், எமது கௌரவ அமைச்சர் அரசினரிடமிருந்து பெற்றுத்தரவேண்டிய ஆதரவு என்பன மட்டுமன்றி ஒவ்வொரு தமிழ்மகனும் தன்னால் முடிந்த அளவு பொருள் உதவி போன்றவற்றையும் அளிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

இவை மட்டுமல்ல, இலங்கையிலுள்ள தமிழ்த்தினசரிகள், வார ஏடுகள், மாதசஞ்சிகைகள் போன்றவை இம்முயற்சிக்கு தாராள மனத்துடன் அவ்வப்போது உதவவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

# முதலிரவு

ஜெய்காந்தின் ஆடைகள் பலவந்தமாக கிழிக்கப்பட்டு நிலை குலைந்து போயிருந்தன.

படுக்கையில் மல்லாந்தபடி கிடந்த அவனது பிரேதத்தில் இறப்பதற்கு முன்னர் யாருடனோ பலவந்தமாக போராடியிருந்ததற்கான கீறல் அடையாளங்கள் வரி வரியாக கோடிட்டிருந்தன.

அவனது நெற்றிப் பொட்டருகில் துப்பாக்கிக் குண்டு துளைத்திருந்தது.

அங்கு உறைந்து கட்டியாகயிருந்த இரத்தமும் ஒழுகி உடையோடு உறைந்திருந்த இரத்தமும் கொலை நடந்து சுமார் 25 மணி நேரமாவது ஆகியிருக்கக் கூடும் என குமாரின் துப்பறியும் மூளையை கணக்குப் போட வைத்தது.

அப்படியானால் அரை மணிக்கொரு தடவை இங்கு வரும் ஹோட்டல் பணியாளர்கள் கதவு தொடர்ந்து ஒரு நாள் முழுவதும் பூட்டியிருப்பது பற்றி கவனம் கொள்ளவில்லையா!

தன்னைப் பின் தொடர்ந்து அறைக்கு வந்த ஹோட்டல் உதவி மானேஜரை போலீஸிற்குப் போன் பண்ணும்படி கூறிவிட்டு சிந்தனையிலிறங்கினான் குமார்...!

சந்தேகம் நுளம்பாகக் குத்தியது.

ஜெய்காந்தின் தலைக்கருகில் தலையணை உறையுள் ஒரு கைத் துப்பாக்கி சொருகி வைக்கப் பட்டிருந்தது. அந்தத் துப்பாக்கி...

குமாருடையது...

பிரமை தட்டிப் போன குமார் அந்தத் துப்பாக்கியையே இமையாது உற்று நோக்கினான். விருந்துக்குப் புறப்படும் முன்னர் தங்கை நிர்மலாவிடம் தனது கோட்டுப் பையிலிருந்த அந்தத் துப்பாக்கியை எடுத்து பீரோவினுள் வைக்கும்படி சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அப்படியானால் கொலை செய்யப் பயன் படுத்தப் பட்டிருப்பது அவனது ஸைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கி...

இதில் சந்தேகமேயில்லை... அதற்குச் சாட்சியாக துப்பாக்கியின் பின் புறத்தில் இரத்தத் துளிகள் ஒட்டிக் கொண்டிருந்தன...

ராஜேஷ்

இரத்தத்துளிகளை மாத்திரம் வைத்துக் கொலைக்கு பயன் படுத்தப் பட்ட துப்பாக்கி தன்னுடையதுதான் என எப்படி நிர்ணயிக்க முடியும்...?

துப்பாக்கியை அங்கு கிடந்த துணி ஒன்றால் சுற்றி வெகு கவனமாக எடுத்துப் பார்த்தான் குமார்... துப்பாக்கியில் இரண்டு குண்டுகள் பயன்படுத்தப் பட்டிருந்தன. ஆனால்...

## 3

தீர்க்கப்பட்ட இரண்டு குண்டுகளில் ஒன்றுதான் ஜெய்காந்தின் உயிருக்கு எமனானது என்பதை எப்படி அறிவது?

ஹோட்டலில் இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்து விட்டதே என்ற பதை பதைப்புடன் ஓடி வந்தார் அந்த ஹோட்டல் நிர்வாகி நீலமேகம். அவரைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் தியாகு வந்தார். அவரது கண்கள் குமாரை மரியாதையுடன் நோக்கின. கைரேகை நிபுணர் உட்பட ஏனையோர் தங்கள் கடமையைச் செய்வதற்காக ஜெய்காந்தின் பிரேதத்தை நோக்கி நடந்தார்கள்.

கொலை நடந்த நேரம், கொலை எப்படி நடந்தது என்பன போன்ற விபரங்களுக்காக ஜெய்காந்தின் உயிரற்ற உடல் உபயோகமாகிக் கொண்டிருந்தது.

ஹோட்டல் நிர்வாகி நீலமேகத்தின் விளக்கங்களை ஆறுதலாக கேட்டுக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் தியாகு.

ஜெய்காந்த் எழுதுவதற்காகப் பயன்படுத்தும் மேஜைக்கருகில் வந்து அதன் மேற்புறத்தை சற்று நுணுகி ஆராய்ந்தான் குமார். டயறி விரித்தபடி கிடந்தது. இரண்டு நாளைக்கு முந்திய செய்திப் பத்திரிகைகளும் ஓரிரண்டு மாத இதழ்களும் அடுக்கப்பட்ட நிலையில் கிடந்தன.

மேஜை டிராயரைத் திறந்து பார்த்தான்.

டிராயர் நிறைய வழக்குகளுக்கான பைல்கள் நிறைந்து கிடந்தன. டிராயரின் ஒரு பக்க மூலையில் நீண்ட ஒரு கவர்-புத்தம் புதிய கவர்-இருந்தது

யோசனையுடன் அதனை எடுத்து திறந்து உள்ளிருந்தவைகளை வெளியில் கொட்டினான் குமார். வெளியே வந்து விழுந்தவைகள் எல்லாம் 'அழகிய புகைப்படங்கள். அதுவும் சாதாரணப் படங்களல்ல... அவைகள் அனைத்தும்—

ஆண் பெண் உடலுறவினை அப்பட்டமாக விளக்கும் ஆபாசப் படங்கள்... அருவருப்பான தோற்றங்களைக் கொண்ட வர்ணப்படங்கள்...

குமார் வியப்புக்குள்ளானான்...

பெண்களின் வாடையே தனக்குதவாது என்று ஒதுக்கி, வாழ்வில் முக்கால் பாகம் துறவு நிலையில் வாழ்ந்திருந்த ஜெய்காந்தின் மனதில் இப்படிப்பட்ட சலனங்களா...?

அவனால் எதையுமே யூகித்து விடை காண முடியவில்லை. துப்பறியும் நிபுணர்கள் யூகத்திற்குப் பெயர் போனவர்கள் என்றாலும், தங்களது உதவியாளர்களைப் பற்றி யூகிப்பது சற்றுக் கடினம்தான்...!

மனதைக் கெடுக்கும் வகையில் ஆபாச உணர்வுகளைத் தூண்டி விடும் படங்களுடன் ஒரு ஆண்மகன் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதென்றால் அதன் விளைவுகள் வெறித்தனமாய் முடிந்து விடும். அல்லது அது அவனது வாழ்விற்கே அஸ்தமனமாய் முடிந்து விடும்...!

'தனி ஒரு மனிதனது மரணத்திற்குப் பின்னர்தான் அவனது இரகசியங்கள் பொது மேடையில் விமரிசிக்கப்படுகின்றன' என்று யாரோ ஒரு பெரிய மனிதர் சொல்லியிருந்தது அவனது ஞாபகத்திற்கு வந்தது.

மரணம்—

எல்லோருக்கும் பொதுவானது தான் என்றாலும் அது வரும் வழியில் தான் அதன் அர்த்த பேதங்கள் ஆராய்ச்சிக்குள்ளாகின்றன. துர்மரணம் அடைந்தவர்களைப் பற்றி சிந்திக்கும் போது பிரச்சினைகள் பல்வேறு திசைகளிலிருந்து முளைக்கின்றன.

முதலாவது அவன் பக்கத்திலிருக்கும் போதே அவனது தங்கை கொலை செய்யப்பட்டாள். இரண்டாவது அவனது உதவியாளன் ஜெய்காந்த் பரிதாபகரமான முறையில் கொலையுண்டு விட்டான். இந்த இரண்டு கொலைகளினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது குமார் ஒருவன்தான்.

அவன் சம்பந்தப்பட்ட வரையில் இந்த இரண்டு கொலைகளும் திட்டமிட்டுச் செய்யப்பட்டவைதான் என்று அவனுக்குத் தெளிவாகத் புரிந்தது.

காரணம்..

அவனது எதிரிகளெல்லாம் புகழ் பெற்ற கொள்ளையர்களும், கொலைகாரர்களும்தான். அவர்களெல்லாம் குமாரைத்தான் பழி வாங்க வேண்டும் என துடித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர வேறு ஒருவரின் உயிரினைப் பறிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட வாய்ப்பில்லை...

அப்படியானால் இந்த இரண்டு கொலைகளுக்கும் காரணம்...?

பிரேத பரிசோதனை முடிந்து பிணமும் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அறையில் குமாரும் பிரேதப் பரிசோதனை செய்த டாக்டரும் தனித்திருந்தனர். டாக்டர் ஏதோ எழுதிக் சொண்டிருந்தார். அவரிடம் அவனுக்குத் தெரிந்து கொள்ள வேண்டியவை நிறைய இருந்தன.

அவரை நெருங்கி நின்றான் குமார். அவர் தலை நிமிர்ந்து அவனை நோக்கினார். அப்போது...

அங்கு வேதனை தரும் சம்பவம் ஒன்று நடந்து விட்டது.

—தொடரும்—



## வேண்டாம் இந்த சிகரெட்

- புகைப்பதால் உங்கள் அழகான பற்களில் காவி படர்ந்து அழகு கெடுகிறது.
- புகைக்கும் பொழுது புகைக்காத உங்கள் நண்பர் உங்கள் அருகில் அமரத் தயங்குகிறார்.
- புகை பிடிக்க வேண்டும் என்று விரும்புகிற நீங்கள் கையில் காசில்லாதபோது பிறரிடம் அதை கட்டாயமாக எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக நேரிடுகிறது. கிடைக்காவிட்டால்...?
- தீப்பெட்டியையும், சிகரெட் பாக்கெட்டையும், உங்கள் சட்டைப் பையிலோ, கால்சட்டைப் பையிலோ வைப்பதால் பைகள் வெளியே தள்ளிக் கொண்டு நிற்கின்றன. அடிக்கடி அவைகளை தொடுவதால் பைகள் கூடிய விரைவில் அழுக்கடைய நேரிடுகின்றன.

# உலகம் சிரிக்கிறது

உண்மை கசக்கிறது – இந்த
உலகம் சிரிக்கிறது!

''விலங்கிலும் உயர்ந்தவன் நானென்ருன்! - அந்த
ஐந்தறிவுடன் ஒன்று அதிக'' மென்ருன்!
கலங்குகிருன்! கையில் மதுவெடுத்து! - கண்
கலங்குகிருன்!! மனத் துயருடுத்து!!

''ஆறறிவுண்டு' என்றவன்தான் - இன்று
அமைதியைக் காக்கத் திணறுகிருன்!
போரிடத் துணிந்தான்! அணுகுண்டைப்
போட்டிடத் துணிந்தான்! உயிர் நாசம்!!!

கண்ணகி சிலையை வைத்திடுவான் - ''அவள்
கற்பின் தெய்வமென முழங்கிடுவான்
பின்புறம் பெண்ணை விலை கேட்பான் - அவன்
போய்விடுவான்? பணம் மறைத்துச் கொள்ளும்!

இத்தனையும் இங்கு நடக்கிறது - மனம்
எண்ணிட துயரம் வழிகிறது!
இத்தனை செய்யும் மனிதனை - அந்த
''விலங்கினும் கீழோன்'' என்று சொன்னேன் -இந்த

உண்மை கசக்கிறது - இந்த
உலகம் சிரிக்கிறது

–பசுமலை. வீ. கே. இராமலிங்கம்

# கவி அரங்கு

# 10

## சீறிச் சினந்த செல்வி



"நான் சொல்வது உண்மை விஜி. என்னை நீ நம்பு. ஒரு கடிதத்தை நம்பும் அளவிற்கு உன்னோடு ஒரு வருடமாக — உயிருக்குயிராக பழகும் என்னை நம்பக் கூடாதா?" குற்றவாளிக் கூண்டிலே நின்று கொண்டு பரிதாபத்தோடு புலம்பித் தவிக்கும் நிரபராதியைப் போல் தவித்தான் சுந்தர்.

கடிதத்தை வாங்கிக் கொள்வதற்காகவும் மாறிய பையை திருப்பிக் கொடுக்கவும் வந்த இடத்தில் தான் விஜி சீறிச்சினந்தாள். அவளுடைய ஆங்காரமான சீற்றத்தில் சுந்தரின் மனம் ஆடிக்காற்றில் பறக்கும் ஆலம் சருகுபோல் படபடத்தது. தென்றல் வீசுமென்று வந்தால் இங்கே சூறைக் காற்று வீசுகிறது. அன்பு கனியும் என்று நினைத்தால் இங்கே அக்கினி ஜுவாலை விட்டு எரிகிறது. புஸ்பமாரி பொழியுமென்று எண்ணினால் இங்கே புழுதியை வாரிக்கொட்டுகிறது. மலரும் சுடுமா? மணமும் நாறுமா? அடபாழும் விதியே!

"சுந்தர், நம்பிக்கை என்ற அச்சாணியினால் தான் வாழ்க்கை ஓடுகிறது. அந்த நம்பிக்கை முறிந்து விட்டால் வாழ்வு தான் ஏது? அந்த எண்ணத்தால் தான் உங்களையே என் வாழ்வின் சதமென நம்பியிருந்தேன். அந்த நம்பிக்கையில் எத்தனை பெரிய கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டீர்கள்' மனம் ஒடிந்துபோன நிலையில் கூறினாள் விஜி.

"விஜி, உன் நம்பிக்கைக்கு ஒரு போதும் துரோகம் செய்யமாட்டேன். உனக்கு துரோகம் புரிய கனவிலும் நினையாதவனை நம்பிக்கைத் துரோகி என சொல்லாமல் சொல்லிவிட்டாய். இப்படிப்பட்ட நெருப்பை அள்ளிக் கொட்டி அவித்துவிடவா ஆசைப் பயிரை என் நெஞ்சிலே வளர்த்தாய்?"

"நெஞ்சிலே நெருப்பை இட்டது நானா? நீங்கள். நீங்கள்தான் நெருப்பை வளர்த்திருக்கிறீர்கள். இந்த நெருப்பை என்னவென்று சொல்வது? காட்டிலே நெருப்பு என்றவுடன் 'ஐயோ' என பதறவும், கற்பூரத்தில் நெருப்பென்றால் பக்தியுடன் கையெடுக்கவும் நெருப்பை தரம்பிரித்து வைத்தானே அவனைத்தான் கேட்க வேண்டும்".

"விஜி, வீண் பேச்சால் வாழ்வை விளையாட்டுக் களமாக்கிக் கொள்ளக் கூடாது!..." என்னு சொல்லு முன் அவள் இடைமறித்தாள்.

"விளையாட்டு என்று நினைத்தது நீங்கள் தான். இல்லாவிட்டால் எத்தனை தடவைகள் நம் காதலை உங்கள் அண்ணாவிடம் சொல்லுங்கள் என்று சொல்லியும் சாக்குபோக்கு சொல்லி மறுதலித்து வந்தீர்கள். காதலை விளையாட்டாக கருதாமலிருந்தால் நம் கல்யாணம் எப்போதோ முடிந்திருக்கும். அண்ணன் வாழ்விலே சறுக்கி விழுந்தவர்; ஒரு பெண்ணுடைய வாழ்விலே களங்கத்தை உண்டு பண்ணியவர்; அந்த களங்கத்தை மறைக்க பணத்தை வாரி இறைத்து வேடம் போட்டவர்; தம்பியும் அப்படித்தான் இருப்பார் என்று அறியச்செய்வதற்கு காத்திருந்தீர்களா? மிகவும் நன்றி சுந்தர். எனக்கு வரப்போகும் கணவன் என்னைப்போல் சத்தியம், நேர்மை, உண்மைக்கு உறைவிடமாக இருக்க வேண்டுமென்று நினைத்து உங்களுடன் மனம் விட்டு பழகினேன். ஆனால், உங்கள் குடும்பத்திலே அடங்கிக் கிடக்கும் ஒரு மாபெரும் ரகசியத்தை மறைத்தவர் என்ற உண்மையைக் காட்டி படுகுழியில் விழவிருந்த என்னைக் காப்பாற்றி விட்டீர்கள், நன்றி சுந்தர், நன்றி"

"விஜி, அபாண்டமாக பழிகளைச் சுமத்தாதே. பின்னால் மனவருத்தப்பட நேரிடும். அண்ணனோ, நானோ எந்த பாவத்தையும் செய்யாதவர்கள் என்பதை நான் எப்பொழுதும் நிருபிப்பேன்" என உறுதியுடன் கூறினான் சுந்தர்.

அவள் சொன்னாள்.

"இந்தக் கடிதம் உங்கள் நிரூபணத்திற்கு எதிராகக் சாட்சி சொல்லும் சுந்தர்" என்று அவள் கையிலிருந்த கடிதத்தை சுட்டிக்காட்டினாள்.

அவன் யோசித்தான். ஆமாம் அண்ணா எழுதிய இக்கடிதம் உண்மையா? உண்மையானால் அண்ணா இவ்வளவு பெரிய ரகசியத்தை யாருக்குமே தெரியாமல் மறைத்து விட்டாரா? உண்மையானால் அண்ணாவால் கெடுக்கப்பட்ட இந்த கமலா யார்? சேதுவின் தங்கையா? இருக்காதே. அண்ணாவிற்கு திருமணம் நடக்கும்போது கமலா ஒன்றுமறியாத அப்பாவிச் சிறுமியாயிற்றே.



மூளை கனத்து வலித்தது.

கையிலே கடிதம் படபடத்தது. திரும்பவும் அதைப்படித்தான்.

அன்புள்ள கமலா,

உன் வாழ்விற்கு எவ்வளவு பெரிய தீங்கைச் செய்துவிட்டேன் என்று என் மனம் வேதனைப்புழுவால் அரிக்கப்படுவதை நீ அறிய மாட்டாய். ஆனால், நான் அறிகிறேன். இந்த வேதனை என் வாழ்வின் கடைசிவரை தொடர்ந்து வரும். நான் பணக்காரியை மணந்துகொண்டு என்ன; செல்வத்தில் புரண்டு கொண்டு தான் என்ன செய்ய? ஒரு பெண்ணின் வாழ்விலே கறையைப் பூசியவனல்லவா நான். எப்படி அந்தக்கறை என்னை விட்டு நீங்கும்? கமலா என் வாழ்விலே ஏன் உன்னைச் சந்தித்தேன்? ஏன் காதல் கொண்டேன்? சந்தர்ப்பத்தின் சூழலால் நான் என்னை மறந்து உன்னில் என்னைப் பதித்தேன். நீ ஏன் என் இச்சைக்கு இடங் கொடுத்தாய்? சொல்ல மாட்டாய். ஏன் யாருமே என் கேள்விகளுக்குப் பதிலளிக்கமாட்டார்கள். பாழும் விதி என்பார் மூட்டாள்கள். நானும் அந்த ரகத்தில் சேர்ந்துவிட்டேன்.

பெற்றோர் பார்த்த பணக்காரப் பெண்ணை மணக்க விருப்பமில்லாமல் உன்னைப் பற்றி சொல்லவும் முடியாமல் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்தபோது 'உங்கள் எதிர்காலம் தான் என் உயிர், நீங்கள் மறுக்காமல் பெற்றோர் பார்த்த பெண்ணை மணந்து கொள்ளுங்கள்' என்று பெருந்தன்மையோடு உன் ஆதிக்கத்தை ஏன் விட்டுக்கொடுத்தாய்? நான் மறுத்தபோது 'குளத்தில் விழுந்து விடுவேன்' என்று பயங்காட்டி பணக்கார மனைவிக்குத் தாலிகட்ட வைத்தாயே

## சுவையான தகவல்கள்

கட்டழகி லிண்டாவை மணக்க அலன் ரப்ஃமேன் என்ற மாணவர் அவளது விருப்பத்தைக் கேட்டு கடிதம் ஒன்று எழுதினார். ஆனால் அதை அவளுக்கு தபாலில் அனுப்ப கூச்சம்; தயக்கம்; அவர்கள் வாழ்ந்தது அமெரிக்காவில். இருவரையும் பிரித்த தூரம் ஐநூறு மைல். அவர் கடிதத்தை ''பாட்டில்'' ஒன்றில் வைத்து மூடி ஹட்லன் விரிகுடாவில் கப்பலிலிருந்து கடலில் அதை மிதக்கவிட்டார்.

பாட்டில் அட்லாண்டிக்சமுத்திரத்தில் 11 மாதங்கள் மிதந்தது. சுமார் 4000 மைல்கள் கடற்பிரயாணம் செய்தது. இறுதியாக மேற்கு இங்கிலாந்தில் உள்ள கார்ன்வால் கடற்கரையில் ஒதுங்கியது. விடுமுறை நாட்களை கழிக்கக் கடற்கரைக்குச் சென்ற ஒருவர் பாட்டிலை எடுத்துப் பார்த்து கடிதத்தை அதில் கண்ட முகவரிக்கு (அமெரிக்காவுக்கு)விமானத் தபாலில் அனுப்பி வைத்தார். கடிதத்தைப் பார்த்த லிண்டா தன் பூரண சம்மதத்தை தெரிவித்துக் காதலனுக்குத் தந்தி கொடுத்தாள். அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆதாரம்: 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

தகவல்: ராணி முத்துசாமி

ஏன்? வாழ்நாள் முழுதும் நினைத்து நினைத்து சித்திரவதைப்பட வேண்டுமென்று தண்டனையளித்தாயா? அல்லது இரக்க சுபாவமே தாய்மையின் அணிகலன் என்பதை காட்டிக்கொண்டாயா? எது எப்படி நினைத்து செய்த போதும் என்னால் உன்னையோ உன்னில் வளரும் ஒரு உயிரையோ மறக்க முடியாது. ஏதாவது பிராயச்சித்தம் செய்யாவிட்டால் செத்த பிறகும் என் ஆத்மா சாந்தியடையாது.

உனக்கு உதவ வேண்டுமென்பதற்காக இத்துடன் ரூபா பத்தாயிரத்துக்கு காசோலை இணைத்துள்ளேன். உன்னுள் வளரும் என் பிள்ளையை எண்ணி மறுக்காமல் ஏற்றுக்கொண்டு அமைதியாக வாழ். ஆண்டவன் உன்னை காப்பாற்றுவார்.

வேதனையுடன் பிரியும்
மூர்த்தி

மூளையைக் குழப்பி விடுவதாக இருந்தது அக்கடிதம். யாருக்கு யார் எழுதியதோ. இன்று என் வாழ்விற்குத் தடையாக வந்து நிற்கின்றதே! அண்ணாவா எழுதினார்? அவருடைய கையெழுத்துதான். ஏன் இப்படிப்பட்ட கடிதத்தை எழுதினார்?

[illegible] வுகாண முடியாத [illegible] சொரூபம் எடுத் [illegible] குமுறிவிழும் விஜியை எப்படிச் சாந்தப்படுத்துவது? அவள் நல்ல மனதிலே விஷவித்தாகத் தோன்றி இருக்கும் சந்தேகத்தை எப்படிப் போக்குவது? கடிதத்தைக் கொடுத்தது சங்கர். அவனால் தான் இந்தச் சிக்கலை அவிழ்க்க முடியும். முடிவாக —

''விஜி, இங்கே பார். இந்தக் கடிதத்தைப் பற்றி ஒன்றுமே விளங்கவில்லை. இதை என்னிடம் கொடுத்தவன் என் நண்பன் சங்கர். அவன் தான் உன் சந்தேகத்தைப் போக்க கூடியவன்....

(தொடரும்)



''என் மனைவி பேசுகிறபோதெல்லாம் நான்தான் இறுதியாகப் பேசுவேன்...
அப்படியா?
அந்த ஒரே சொல்லில் அவள் வாய் 'கப்சிப்' என்றாய் விடும்...
''என்ன அந்த சொல்?
என்னை மன்னித்துவிடு கண்ணே''

## கடைசி ஆசை

மனித மனத்திலே எழுகின்ற ஆசைகள் மிக விசித்திரமானவை. அதிலும் மரணத்தின் பிடியில் சிக்கி விட்டவர்களின் இறுதி ஆசைகள் விசித்திரமானவையும் கூட.

பர்ப்பியின் பத்தாவது எல் மன்னன் மரணப் படுக்கையில் கிடந்தாராம் 1736ம் ஆண்டில். பிழைத்து எழமாட்டார் என்ற நிலை பிறந்த போது அவரது கடைசி ஆசை என்னவென்று கேட்கப்பட்டது. அவர் தன் படுக்கையில் ஒரு கோழிச் சண்டை நடக்க வேண்டுமென்று விரும்பினாராம். யாரும் அதை மறுத்துப் பேசவில்லை. மன்னரின் ஆசையல்லவா? மறுகணமே அங்கே இரு கோழிகள் தருவிக்கப்பட்டன. சண்டையிட்டுக் கொண்டன.

- மூ. குமாரகுலசிங்கம் -

# வெள்ளை மனங்களும் கறுப்புக் கரங்களும்



## செம்பியன் செல்வன்

பனிமலைப் புனிதனே!

உன்னை... உன் திருவடிகளைச் சேவிக்க என்னிடம் புனிதமானது எதுவுமேயில்லை.

என் உடலோ பாவச்சேற்றில் புரண்ட அழுக்குச் சடலம்.

என் விழிகளும், கரங்களும், கால்களும், என் இதழ்களும் காம பீடங்களைத் தேடி அலைந்து சிங்காரிகளின் உப்புக்கரித்த இதழ்களையும், உடல்களையும் ஸ்பரிசித்து புளகாங்கிதமடைந்து, இறுதியில் களைப்படைந்து புனிதம் இழந்தவை.

புனிதத்தைத் தேடி ஓடியலையும் வழிகளிலே உள்ள அழுக்குகளில் மனம் தோய மெய்மறக்கும் பாவி நான்.

அழுக்கின் அழுக்காகிய நான்... புனிதத்தின் புனிதமாகிய உன்னைச் சேவிக்க, அடிபணிய, அடிமுடி தோய உடலாலும் உள்ளத்தாலும் திருமுழுக் காட்டத் துடிப்பது வேடிக்கையான விந்தையே.

விந்தைகள் புரிபவனும் நீயே...... விந்தைகளும் நீயே...

நாம் கருவிகளே...... கருவிகளே காரணனைத் தேடும் விந்தையைச் செய்பவனும் நீயே...

உன்னை என் தத்துவ மனத்தடாகத்தில் இழுத்து, அழுத்தி வெற்றி காணத்துடிக்கும் வேளைகளில், நீ தடாகத்தினின்றும் வெளியேறி கரைநின்று சிரிப்பொலி சிந்துகிறாய்... அந்தச்சிரிப்பொலியை தடாகத்தில் நான் பெற்ற மணிக்குலங்கள் சப்திப்பதாக எண்ணி எண்ணி நான் இறுமாந்து அயர்ந்திருக்கும் வேளையிலே...

அர்த்தத்தின் அர்த்தமான நீ,

சேற்றின் தளைகளிலே என் கால்கள் சிக்குண்டு கிடப்பதை காட்டுகிறாய்...

அவ்வேளைகளில் என் கண்கள்... ஞான ஒளித்தெறிப்பில்...... அக, புற உண்மைகளின் சொரூபங்களைத் தரிசிக்கும் அக்கணங்களில்,

நீ அரூபியாகி விடுகின்றாய்.

உலகின் ரூபத்தைப் படைத்த உன்னையே, ரூபனாக, அரூபனாக, பூஜ்யனாக காணவிழையும் என் தத்துவார்த்தச் சிந்தனைகள் சிக்கலாகிய நூல்கண்டாகி என்னையே திணறச் செய்கின்றன. கேலி செய்கின்றன.

நீ மெல்ல நழுவிட,

நானும் திகைப்புமே எஞ்சுகிறோம்

ஆனாலும் அதே வேளைகளில்—

என் உணர்வுகள், உன்மேல் அவாவிடும் காதல் உறவாகின்றன. நாயக வேட்கை நாடிடும் நாயகியின் புனித ஊற்றுகளாகி விடுகின்றன.

நீயோ — லீலா விநோதனாகி,

என் உடலின் கொதித்துக் கொப்பளிக்கும் இரத்த ஆற்றின் படகோட்டும் துறைவனாக...

விளையாட்டையே தத்துவமாகக் கொண்டவனே!...

துறவில் பற்றைப் பற்றவைத்து விட்ட பரமன்... உன் அலகில்லா விளையாட்டுக்கள் உன்னை என் வழிபாட்டின் கதாநாயகனாக்குகின்றன...

உலகின் கதாநாயகனான உன்னை என் வழிபாடு என்னும் குறுகிய வட்டத்திற்குள் வசப்படுத்தி அதன் நாயகனாக்கத் துடிக்கும் என் அறியாமையை மன்னித்து விடு.

உன்னை எங்கெல்லாம் தேடி, இளைத்து, ஏமாந்து தோல்வி சுமந்த நெஞ்சத்தின், ஆறுதல் பெருமூச்சாக நான் செய்த ஏற்பாட்டை மன்னித்து விடு... எனக்கு மணக்க விடு...

என் மன வட்டத்திற்குள் சிக்கிய உன்னை, வழிபட வேண்டும் என்ற ஆவலால்,

என்னிடம் எதுவுமே தூய்மையாக இல்லாததால்,

குற்றமற்ற புனித நறுமலர்களைத் தேடி, நாடி ஓடினேன். அப்போது,

என் நெஞ்சிலே எத்தனை எண்ணங்கள்... வேதனைகள் பொரியாகச் சொரிகின்றன.

---



**திருமணம்'** — இது சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகிறது என்கிறார்கள் அறிஞர்கள். சொர்க்கத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

● துன்பங்களே இல்லாத ஒரு உலகமே சொர்க்கம். இன்பம் ஒன்றே அங்கு ஆட்சி புரிகிறது. இதைப் போலவே திருமண பந்தமும் இன்பம் ஒன்றுடன் மட்டுமே சங்கமிக்க வேண்டு .

● நல்லவர்களும், அறிஞர்களும், புண்ணிய ஆத்மாக்களும், கற்பில் சிறந்தவர்களும் வாழும் இடமே சொர்க்கம். அங்கு நிச்சயிக்கப்படும் திருமணம் குறையின்றி நிறையோடு பூரணத்துவம் பெறும் என்பதில் ஐயமில்லை;

நான் தேடும் மலர்களும்,

மனுகரனின் காமக்கரங்கள் தீண்டாத புத்தம் புதியனவாக இருக்க வேண்டுமே...

எண்ணங்கள்... எரிபொருளாய், வேகமூட்ட நான்—

உனக்குகந்த மலர்களை... புவியின் சிலிர்ப்புக்களை... வசந்தத்தின் கொடையை... கோடையின் கொதிப்பை... புத்துணர்ச்சியை நாடி...

குளங்களிலும்... தடாகங்களிலும்... தண்ணளிச் சோலைகளிலும்... தேடுதல் நடாத்தினேன்... உன்னைத் தேடும் நல்லடியார் போல்...

விடிந்தும் விடியாத... பாதை இனம் காட்டாத புலரிப்பொழுதிலே ... நான்பட்ட சிரமங்கள் எத்தனை... எத்தனை... கழிந்த காலங்கள் தான் எவ்வளவு?...

மொட்டாய்க் குவிந்திருந்து, செம்மையின் வண்மை அடியிருந்து நுனி பரவ, அவை இதழ் பிரிக்கும் வேளைகளுக்காக நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

எத்தகைய ஏமாற்றங்கள்...!

சில காற்றிலே தன் இதழ்களை உதிர்த்தன. சில நீரலைகளால் அள்ளுண்டன; சில மலர்ந்தும் மலராவேளையிலே ரீங்கார வண்டுகளால் களங்கப் படுத்தப்பட்டன.

ஆயினும் என் முயற்சிகள் சோர்வடையவில்லை.

உனக்காகவே, நான் ஈடுபடும் தொண்டுகள் என்னை... என் உள்ளத்தை நலிய விடுவதேயில்லை.

நானும் என் முயற்சிகளும் ... முயற்சி... முயற்சி...

புனித மலர்கள்... வெள்ளை மலர்கள்... செம்மை மலர்கள்... மஞ்சள்... ஊதா...

உனக்காக நான் பறித்த மலர்களை உன் பீடத்திலிடுவதற்காக நான் உன் திருவாவில் நோக்கி ஓடோடி வந்தேன்.

ஒரு கணம் மெய்மறந்தேன்.

'ஆஹா'... என் இறைவன் ஆலயத்தில் புகும் தகுதி, தன்மை, ஆற்றல் எனக்கு வந்துவிட்டது... நான் பாக்கியசாலி...'— ஒரு கணம் மெய் மறந்தேன்.

என் ஆவல்... அகங்காரம்... ஒரு கணம் என்னை நிலைகுழைய வைத்தது.

அந்தோ —

அடுத்த காலடி எடுக்கையிலே —

காலிடறி—

என் புனித மலர்கள்... இறைவுனின் தாளடி சரிய வேண்டிய அந்த ஆத்ம புஷ்பங்கள்...

சாக்கடை நீரில் சரிந்து, மிதந்து சிரிக்கின்றன.

என் கரங்கள் கறுப்பாகித் தெரிகின்றன.



# கே. ஆர். விஜயா

பத்து ஆண்டுகளில் நூறு படங்களுக்கு மேல் நடித்து விட்ட கே. ஆர். விஜயா 'வெண்முத்துப் பல்லழகி' என்று ரசிகர்களால் பாராட்டப் படுகிறார். இன்று விஜயாவின் உடம்பு உப்பியிருப்பது உண்மைதான்! ஆனால், அன்று கண்ட அதே முகத்தைத்தான் இன்றும் காண்கிறோம். அதில் அவ்வளவாக மாறுபாடு தென்படவில்லை.

எங்கும் எவரிடமும் எதைப்பற்றி பேசினாலும் பற்கள் அத்தனையும் வெளி தெரியும்படி சிரித்த முகத்துடனே பேசும் விஜயாவை விரும்பாதவர் யாரும் இல்லை எனலாம்.

"நிறைய குழந்தைகளைப் பெற்று பலர் இன்று அவதிப் படுவதை பார்க்கிறோம். உண்ண உணவில்லாமல் திருடும் குழந்தைகளை நாம் பார்க்கிறோம். எனவே குடும்பக் கட்டுப் பாடு திட்டம் ஒன்றுதான் நாட்டை வளமான பாதைக்கு அழைத்துச் செல்ல முடியும்." என்று நாட்டின் மேலுள்ள பற்றுதலால் கூறும் இவர்-இது போன்ற பிரச்சாரங்கள் சினிமாவில் இடம் பெற வேண்டும் என விரும்புகிறார்.

ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பெற்று விட்ட இவர் ஒரு சிறந்த நடிகை என்பதில் ஐயமில்லை.

இளந்தமிழன்.

---

# நவரச சினிமா

● ஜெய் சங்கர், ஜெயசித்ரா ஜோடி நடித்த தமிழ்ப் படங்கள் மாதம் இரண்டு, மூன்று வெளிவருகின்றன. ஓஹோ என ஓடாவிட்டாலும், தயாரிப்பாளருக்கு நஷ்டம் இல்லை, தவிர இருவரும் சேர்ந்த நிறைய படங்களில் நடிப்பதால், ஜெய் சங்கர் 'கால் ஷீட்டிற்கு' ஏற்றாற் போல் ஜெயசித்ராவால் 'கால் ஷீட்' கொடுக்க முடிகிறது. ஆனால் இப்போது இந்த ஜோடியில் ஒரு மாற்றம். ஜெய் சங்கரின் புதுப் படங்களில் வெண்ணிற ஆடை நிர்மலா அதிகம் இடம் பெறுகிறார். முதல் ஜோடியுடன் என்ன பூசலோ!

● லக்ஷ்மி இப்போதெல்லாம் தமிழ்ப் படங்களை சட்டை செய்வதில்லை. மலையாளம், ஹிந்தி படங்கள்தான், மலையாள 'சட்டைகாரி' ஹிந்தி' ஜாலி' யாக அவரை வைத்து வெளிவருகிறது. இன்னும் சுனில்தத்துடன் இரண்டு படங்களிள் நடிக்கிறார். அவர் நடிக்கும் 'பிஞ்சு மனம்' வெகு நாட்களுக்குப் பிறகு வெளி வரப் போகிறது.

● வாலியின் 'கிருஷ்ண விஜயம்' என்ற தேங்காய் சீனிவாசன், குழு நடித்த நாடகம்தான் 'கலியுகக் கண்ணனாக திரையிடப் பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றது. அதைத் தொடர்ந்து "தேங்காய் சீனிவாசன் 'உங்க வீட்டுக்கல்யாணம், மற்றும் பல படங்களில் கதாநாயகனாக நடிக்கிறார்.

● ஜெயலலிதா, படங்களையும் பத்திரிகையாளர்களையும் ஒதுக்கியிருந்தார். அமெரிக்கா சென்று விடும் திட்டம், கை விடப்படவே மறுபடியும் நடிக்கத் தயாரிப்பாளர்களிடம் விருப்பம் தெரிவித்துள்ளார். இப்போதும் பத்திரிகை நிருபர்களிடம் பாராமுகம் தான். சோவின் நாடகமான 'யாருக்கும் வெட்கமில்லை அவர் டைரக்ஷனிலேயே படமாக்கப் படுகிறது அதில் கதாநாயகி ஜெயலலிதா.

● ஹிந்தி நடிக, நடிகைகள், தம்மைப் பற்றி பொய், அவதூறு, வம்பு எழுதும் பத்திரிகைகளை ஒதுக்குகிறார்கள், பார்ட்டி, பேட்டி, போட்டோ, எதற்கும் ஒத்துழைப்பதில்லையாம்.

● வட நாட்டில் அநேக நடிகைகள் திருமணம் செய்தும், Maternity leave விலும் போய் விடுவதால் கதா நாயகி பஞ்சமாம். மும்தாஜ் டிம்பிள், ராக்கி, ஜயபாதுரி, மௌசுமி-சட்டர்ஜி, ஹேமா மாலினி, ஜீனத், ரேகா தான் மீதி அதனால் தென்னாட்டு ஜெயசுதா, ஸ்ரீ வித்யா, லக்ஷ்மி, பிரமிளா முதலியோருக்கு அங்கிருந்து அழைப்பும், வரவேற்பும் வந்துள்ளன. இவர்கள் நடித்து ஹிந்தி படங்கள் வெற்றி பெற்று விட்டால், நாட்டில் கதாநாயகி பஞ்சம் வந்து விடும். இவர்கள் ஏன், பிறகு தமிழ் சினிமா பக்கம் திரும்பப் போகிறார்கள்?

உஷா — [illegible]




# அழகுக் குறிப்புகள்

☆ கன்னங்கள் பிரகாசமாக இருக்கவேண்டுமா?

இரவில் படுக்கும்போது கன்னங்களில் வெண்ணெயையும் மஞ்சள் தூளையும் கலந்து தடவிக்கொண்டு படுங்கள்: காலையில் எழுந்ததும் சோப்புப்போட்டு முகத்தைக் கழுவிவிடுங்கள். கன்னங்கள் அழகுக் கிண்ணங்களாக ஆகிவிடும்.

☆ இரும்புச்சத்து குறைந்தவர்களுடைய உடம்பில் இரத்தம் இருக்காது. கோதுமை, தக்காளி, கீரை, பழங்கள் ஆகியவற்றை நிறையச்சேர்த்துக் கொள்ளுங்கள். இரும்புச்சத்து உடம்பில் சேர்ந்துவிடும்.

☆ நல்ல தூக்கமே ஆரோக்கியத்தின் ஊற்று. மலம் சரிவரக்கழிந்தால் நல்ல தூக்கம் சுலபமாகவரும். மாங்கனியச்சத்து உடம்பில் குறைந்தால். சரிவர கழியாது. திராட்சை, எலுமிச்சை, அத்தி ஆகியவைகளில் மாங்கனியச் சத்து நிறைய இருக்கிறது. —செல்வி: ஜெயபவானி—

---

☆ துணியில் பேனாமை கொட்டிக் கொண்டால் உடனே மை கொட்டிய இடத்தில் கொஞ்சம் உப்புத்தூளைத் தடவி, பிறகு ஈரத்துணியால் துடைக்கவேண்டும். உப்புத்தூள் பட்டதும் மைக்கறை போய்விடும்.

☆ பெண்கள் புகைப்படம் பிடித்துக் கொள்ளும்போது எந்த நிறச்சேலையை வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளலாம். ஆனால் சோளி மட்டும் வெள்ளையாக இருக்க வேண்டும். வெள்ளைச்சோளி அணிந்தால்தான் புகைப்படம் அழகாக இருக்கும். புகைப்படத்தில் முகம் அமைதியுடன் இருக்கும்.

☆ உருளைக் கிழங்கைச் சமையல் செய்யும்போது தோலைச் சீவாதீர்கள். தோலோடு சேர்த்து வெட்டிப் போட்டுச் சமையல் செய்யுங்கள். தோலைச் சீவி விடுவதால் ஏராளமான சத்துக்களை நாம் இழந்துவிடுகிறோம்.

☆ உதட்டுச் சாயம் பூசிக்கொள்ளும் பழக்கம் உள்ள பெண்கள் பகலில் தங்களுக்குப் பிடித்த எந்த நிறத்தை வேண்டுமானாலும் பூசிக்கொள்ளலாம்- ஆனால் இரவில் மட்டும் சிவப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறம் உள்ள உதட்டுச் சாயத்தை மட்டுமே பூசிக்கொள்ள வேண்டும். இரவில் சிவப்பு நிற உதட்டுச் சாயம்தான் அழகாக இருக்கும்.

★ சொர்க்கம் என்னும் இன்ப வானில் நரகவேதனை எனும் கரு மேகங்கள் நிறையக் கூடாது. இதைப்போல சொர்க்கத்தில் தீர்மானிக்கப்படும் திருமணங்களும் நரகவேதனையற்ற நிர்மல வானமாக பளிச்சிட வேண்டும் என்பதும் உண்டு.



மாணிக்கம் குறுக்கெழுத்துப் போட்டி இல. 6-ல் பரிசுபெறும் 10 அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் இங்கே பிரசுரமாகின்றன. இவர்கள் அனைவருக்கும் எமது மகிழ்ச்சி கலந்த வாழ்த்துக்கள். பரிசுகள் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப் படும்.

☆ எஸ். ஏ. அப்துல் கப்பார்,
அல்-ஹம்ரு வீதி, மருதமுனை,
கல்முனை.

☆ செல்வி சி. அமிர்தலிங்கம்,
அடம்பன், மன்னார்.

☆ அன்வாரா அபூபக்கர்,
முஸ்லீம் மகுதி ரோட்,
கிராண்ட் பஜார், மன்னார்.

த. மோகனராஜா,
C/o. க. தம்பிராஜா (அதிபர்)
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

☆ செ. கனகரத்தினம்,
துளசிபுரம்,
ரவுண்ட்போட் ஜங்ஷன்,
லவ்லேன், திருக்கோணமலை.

☆ மா. மெய்யழகன்,
'அன்பகம்'
அல்வாய் வடக்கு, அல்வாய்.

☆ திருமதி அ. மலர் குரூஸ்,
மே/பா. அன்ரனி,
பள்ளிமுனை, மன்னார்.

☆ செல்வி க. குமுதினி,
பழமுதிர் சோலை,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

☆ கி. நீலமேகன்,
வேவரி, காங்கேசன்துறை.

☆ சொ. சேதுராமு,
பிரதான வீதி, உடப்பு.

## சரியான விடைகள்

இடமிருந்து வலம்:

1) ஷண்முகப்பிரியா 6) பதுமை 7) தறி 8) சஞ்சிகை 9) ஏலேலோ
11) தாகம் 14) நாடகம் 15) வதனம் 16) கம்பு 17) இதயம் 18) மாம்புரி
19) ஆணை 20) காவடி 21) ஜோடி 22) பஞ்சு 23) நிலவு
25) லிங்கம் 26) சிவாஜி.

மேலிருந்து கீழ்

2) முதலோன் 3) கறி 4) பிருந்தாவனம் 5) யாசகம் 6) பசி
9) ஏணி 10) வலம்புரி 12) கடம் 13) கடகம் 17) இணை
18) மாடி 20) காஞ்சி 21) ஜோலி 24) லதா

கல்: 3 **மாணிக்கம்** ஒளி: 4

திங்கள் வெளியீடு

ஜூலை - 1975

*''கமழ்கின்ற சந்தனங்கள், சமைகின்ற பொதிகை அன்னே,
உணைத் தந்தாள்; தமிழைத் தந்தாள்''* —பாரதிதாசன்

# பாரதம் அளித்த ஜனநாயகத் தீர்ப்பு

''மனித உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள். ஜன நாயகத்தின் பெயரால் சுதந்திரம் தழைத்தோங்கட்டும்'' என்று ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்னுல் பண்டித ஜவகர்லால் நேரு ஐ. நா. சபையில் தனது சொற்பொழிவொன்றை ஆரம்பித்தார்.

இந்த நெறி அன்றைய தினம் ஏற்றுக் கொள்ளப்பட்டதோ இல்லையோ, இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு - கௌரவம் பெற்றிருக்கிறது. அதுவும் எந்த நாட்டின் தலைவராக நேரு இக் கனவைக் கண்டிருந்தாரோ, அதே நாட்டு மக்கள், அதே நேருவின் மகளுக்கு அதே நெறியை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

இந்தியாவில் மட்டுமின்றி அகில உலகிலும் இணையற்ற அரசியல்வாதியாக திகழும் திருமதி இந்திரா காந்தியின் தேர்தல் செல்லுபடியாகாது என்று இந்திய உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதைக் கண்டு உலகமே வியந்து நிற்கிறது.

இத் தீர்ப்பின் விளைவுகள் எப்படியிருப்பினும், உலகின் மிகப் பெரிய ஜன நாயகக் கொள்கை எந்த அரசியல் சலசலப்புகளுக்கும் அப்பாற்ப்பட்டு — தனித்துவம் பெற்று நிற்பது குறிப்பிடத் தக்கது.

ஜனநாயகத்தை விரும்பும் உலக வல்லரசுகள் கூட பண ஆதிக்கம், அரசியல் அநாகரீகம், தனியார் சுயநலம் ஆகியவற்றினுல் தம் செல்வாக்குகளை இழந்து வரும் இன்றைய நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் பஞ்சம், பொருளாதார, அரசியல் நெருக்கடி ஆகியவற்றினுல் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் பாரதம் தனது பிரதமரையே சட்டத்தின் முன்னுல் ஒரு பிரஜையாகக் கருதிச் செயல்ப்பட்டிருக்கிறது.

ஜனநாயகம் எளிதில் செத்து மடிந்து விடப்போவதில்லை.... உலகின் எங்கோ ஒரு உயரமான இடத்திலிருந்து கொண்டு தன் தனித்துவத்தைப் பேணிக் காத்து வருகிறது என்பதை உணர்த்தும் பாரதத்தின் ஜனநாயகப் பண்புகள் உலகெங்கும் பரவட்டும்.

ஆசிரியர்

# எழுத்து மணிகள்

பூரணத்துவம்தான் வாழ்க்கை. பூரணத்துவம் அற்ற எதுவும் வாழ்க்கையல்ல. பூரணத்துவத்தைப் பெறமுயலுகின்ற போராட்டமே யதார்த்தம். ஆனால் அந்த யதார்த்தம் தான் வாழ்க்கையல்ல, பேராட்டத்தின் பயனுள்ள முடிவே வாழ்க்கை - இது இவரின் இலக்கியநெறி.

இவரது கதைகளில்—

எக்காலத்திற்கும் பொருந்துவதான மனிதனின் அடிப்படைப்பண்புகள்-மனித மனச்சலனங்கள் - என்ன உணர்வுகள் - ஏக்கச்சுழிப்புகள் - யாவும் முதலில் பல வீனப்பட்டு அங்கலாய்தாலும் அவையாவும் தத்துவ நெறியில் சத்தியநெறியில் சென்று அமைதி காண்கின்றன. மனதின் மேற்றளத்தில் நிகழும் தாக்கஉணர்ச்சிகளை மட்டுமல்லாது அடிமனதில் ஆழ்ந்து உறங்கிக் கிடந்து அவ்வப்போது எழும் அதிர்ச்சிகளால் உள்ளோட்டமாக தொழிற்படும் மனவலைகளின் பாதிப்புகளையும் காணலாம். இவருக்குபின்னால் எழுதவாரம்பித்த மௌனி, லா. ச,ரா போன்றோரையும் இவர் எழுததுக்களில் தரிசிக்கலாம்.

---



## தலைவிக்காக...

தமிழக முதல்வராக அண்ணா இருந்தபோது சென்னை இராணிமேரி கல்லூரியில் நடந்த திருவள்ளுவர் விழாவில் தலைமை வகித்து பேசிக்கொண்டிருந்தார்.

மாணவியருக்குப் பரிசு பரிசுவழங்க அழைக்கப்பட்டிருந்த திருமதி இராணி அண்ணாத்துரை, அண்ணா பேசிக்கொண்டிருக்கும் பொழுதுதான் வந்தார்.

உடனே அண்ணாத்துரை, ''தலைவன் வருகைக்காகத்தலைவி காத்திருப்பதை, சங்கப்பாடல்களிலும் தமிழ் இலக்கியங்களிலும் அறிவோம். ஆனால் இங்கே அதற்கு மாறாக. தலைவி வருகைக்காகத் தலைவன் காத்திருக்க வேண்டியதாயிற்று...' என்று சொன்னதும்... அவையில் 'கொல்'' எனச் சிரிப்பொலி எழுந்தது.

தகவல்: சந்திரலெட்சுமி




அவர் நிமிர்ந்திருந்தார். அவருக்குப் பின் புறமாகச் சற்று விலகி அந்தப் பால சந்நியாசி உட்கார்ந்திருந்தார். பக்கத்தில் நின்ற ஆலமரம் வானத்தை மறைப்பது போல் எங்கும் பரந்து வளர்ந்து கிடந்தது. சற்றுத் தொலைவில் அவர்களுக்கு எதிரில் நெருப்பு ஒரு மனித உடலைக் கழுவித் துடைத்து உண்டுகொண்டிருந்தது. அப்படி எரிந்து கொண்டிருந்த நெருப்பின் ஒளி வெகு தூரம் வரைக்கும் இருளைத் துரத்தி விரட்டியது. பிரமாண்டமான அந்த ஆலின் விழுதுகளின் நிழலும் அடிமரத்தின் நிழலும் பூதாகரமாக எதிர்த் திசையில் படுத்துக் கிடந்தன.

இரண்டொரு நரை கண்ட பெரியவரின் கம்பீரமான முகமும், அடர்ந்து கறுத்த ரோமங்கள் பிரகாசிக்கும் இளையவரின் ஒளி நிறைந்த முகமும் தெளிவாகத் தெரிந்தன. பெரியவர் கண்களைப் பாதி மூடியபடியிருந்தார். மற்றவரோ அகல விழித்தபடி எதையோ கவனித்துக் கொண்டிருந்தார்.

எங்கும் நிசப்தம் நிலவியது. மரணத்தின் நிழல் படிந்த நிசப்தம் அது. அக்கினி அந்த உடலுடன் விறகையும் சேர்த்துத் துடைப்பதனல் உண்டான சப்தங்கள் அங்கே நிலவிய அமைதியை இடையிடையே மாசுபடுத்திக் கொண்டிருந்தன.

வாழுகின்ற மனிதனல் பெரிதும் அஞ்சி வெறுக்கப்படுகின்ற, கடைசியில் அவனுக்கு அடைக்கலம் தந்து ஆறுதல் செய்கிற இடம் அது. வேறு வகையில் — அளவில் — நிலையில் இன்ப துன்பங்களை மாறிமாறி அனுபவித்த தசை நரம்பு எலும்பு முதலிய எல்லாமே துகளாகி அந்த மண்ணின் உருவை ஏற்றுக் கொண்டு தாமும் அதுவாகி ஐக்கியமாகி விட்டன.

ஒரு காலத்தில் யாரோ இரண்டு பகையரசர்களின் படைகள் ஒன்ருேடு ஒன்று மோதி நிர்மூலமான இடமும் அதுதாஞம். அகால வேளைகளில் குதிரைகள் ஓடுகிற, கனைக்கிற சத்தங்கள், யானைகள் பிளிறுகிற பேரொலிகள், வெட்டு, குத்து, கொல்லு என்ற இரக்கமற்ற குரல்கள் வேதனை தோய்ந்த மரணதாகத்தில் எழுகின்ற சோக மயமான ஓலங்கள் எல்லாம் கலந்து கேட்கும் என்று சொல்கிருர்கள்.

அது மயானம்; இடு காடும் சேர்ந்த மயானம். பேய்கள் தங்கள் விருப்பம் போல விளையாடி மகிழும் இடம். எங்கே திரும்பினாலும் நிர்மானுஷ்யத்தின் சுவடுகள் தெரிந்தன.

பெரியவர் கண்களைத் திறந்து உற்றுப் பார்த்தார். எதிரில் அந்த உடல் கருகிச் சுருண்டு வெடித்து எரிந்து கொண்டு இருந்தது. தீக் கொழுந்து எழுந்தும், அடங்கியும் வளைந்து நெளிந்தும், வேறு வேறு திசைகளில் குதித்தும் காற்றுடன் சேர்ந்து தானும் விளையாடியது.

திடீரென்று மேலே உறங்கிக் கிடந்த பறவைகளின் அவலக் குரல்கள் எழுந்தன. கூகை ஒன்று, எங்கிருந்தோ வந்து கொத்தியும், கிழித்தும் அவற்றைக் கொன்று தள்ளியது. அபாயத்தை எதிர் பார்த்திராத அந்த ஏழைப் பறவைகள் செயலற்று ஒவ்வொன்றாகக் கீழே விழுந்தன. யமனாக வந்த கூகை அங்கிருந்து பறந்து சென்ற பிறகும் வெகு நேரம் வரைக்கும் அந்தப் பறவைகளின் துன்பக் குரல்கள் கேட்டுக் கொண்டே இருந்தன.

நடு நிசி ஆகி விட்டது. அது வரை ஓங்கி எரிந்த நெருப்பு மெல்ல மெல்ல அடங்கித் தழலுருவாயிற்று. மறுபடியும் சப்தநாடிகளையும் ஒடுங்கச்செய்யும் பேயமைதி. சுற்றிலும் இருள். இருளை விழுங்கி அதையே உமிழ ஆரம்பித்தது.

பெரியவர் திரும்பிப் பின்னால் உட்கார்ந்திருந்த இளந் துறவியின் முகத்தைப் பார்த்தார். அவருக்கே அது ஆச்சரியத்தைக் கொடுத்தது. அந்த வைராக்கிய புருஷனின் குழந்தை முகம் எதிரில் கிடந்த தழல் போல் என்றும் இல்லாத ஒளியுடன் விளங்கியது.

'குழந்தாய்!' என்று அவர் தம்மை மறந்து கூப்பிட்டார்.

இளையவர் எழுந்து முன்னால் வந்தார். பெரியவர் கேட்டார்: 'இங்கே எதைக் காண்கிறாய்?'

சிறிது தாமதித்து பதில் வந்தது 'காலருத்திரனது நர்த்தனத்தையே காண்கிறேன் சுவாமி'

கேட்டவர் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு 'இனிப் புறப்படுவோம்' என்று சொல்லிக் கொண்டு எழுந்தார்.

இருவரும் நடக்க ஆரம்பித்தார்கள். குற்றுயிராய்க் கிடந்த ஒரு பறவையை சர்ப்பம் ஒன்று சிரமப்பட்டு விழுங்கியபடியே நகர்ந்து வழி விட்டது.



## மாதர் மணி மொழிகள்

☆ மனைவி கணவனுக்கு அவனுடைய இளம் வயதில் நெருங்கிய துணைவி; நடுத்தர வயதில் கூட்டாளி; தள்ளாத வயதில் தாதி. — பேகன்

☆ அழகிய பெண்களிடம் ஒரு தனிச் சக்தி இருக்கிறது. அதை மாந்தரின் முன்னேற்றத்திற்கு உபயோகிக்க வேண்டுமென்பதே இறைவனின் எண்ணம். — எமாசி

☆ அழகிகள், அரசர்கள், அதிகாரிகள் இவர்களே அகிலத்தை ஆட்சி செய்கிறவர்கள். இவர்களில் அழகிகளே தனிப்பட்ட மாந்தரின் மனதைப் பாதித்துச் சீர் திருத்தம் செய்யக் கூடியவர்கள். — எட்கர்

## (2)

கிழக்கில் இருந்து வந்தவர்கள் வடக்கு நோக்கிச் சென்றார்கள். பெரியவர் முன்னுகவே நடந்தார். எங்கும் வளர்ந்து கிடந்த நாணல்கள் அவர்களின் பாதங்களைத் தொட்டுத் தொட்டு மீண்டன. பாதையோ வளைந்து வளைந்து போய்க் கொண்டிருந்தது.

இளையவர் அடிக்கடி வானத்தைப் பார்த்துக் கொண்டே நடந்தார். அது நிர்மலமாகி ஞானிகளின் மனம் போல் தெளிந்திருந்தது. கொஞ்சத் தூரம் சென்றதும் பெரியவர் திரும்பி நின்று 'அப்பனே உனக்குத் தூக்கம் வரவில்லையோ?' என்று கேட்டார்.

'இப்பொழுது இல்லை சுவாமி,'

'பசி?'

'அதுவும் இல்லை'

மறுபடியும் அவர்கள் நடக்க ஆரம்பித்தார்கள். இரண்டு நாழிகைத் தூரத்தில் அந்த ஒற்றையடிப் பாதை அகன்ற ஒரு சாலையில் போய் முடிந்தது. அந்தச் சாலையின் ஓரங்களில் பெரிய, பெரிய மரங்கள் வளர்ந்திருந்தன. இடையிடையே மாளிகைகள் போன்ற வீடுகளும் தெரிந்தன.

அவர்கள் நிற்காமலேயே தொடர்ந்து நடந்தார்கள். 'இது எங்கே போகிறது? நாம் எங்கே போகிறோம்?' என்ற விசாரம் அவர்களைத் தொடவில்லை. மேலும் சில நாழிகைத் தூரம் நடந்து சென்றார்கள். திடீர் என்று பெரியவர் வழியை விட்டு இறங்கி ஒரு வீட்டின் முன் புறத்திலே மரம் ஒன்றைச் சுற்றிக் கட்டியிருந்த மேடையை அடைந்து படுத்துக் கொண்டார். மற்றவரும் அவரைத் தொடர்ந்து சென்று அவரது காலடியில் சரிந்தார்.

புலருவதன் முன் இளையவர் எழுந்து உட்கார்ந்தார். மிகச் சமீபமாக யாரோ ஒரு பெண் நிற்பதைக் கண்டதும் அதை நன்றாக ஊன்றிப் பார்த்தார். வைகறையின் மங்கிய ஒளியிலே அவளது தோற்றம் யாரோ ஒரு அணங்கு போல இருந்தது. பிரபஞ்சத்தின் எந்த விகாரமுமே அணுகாத அவரது உள்ளத்தில் அது பெரிய ஆச்சரியத்தையே உண்டு பண்ணியது. அதனுல் அவர் அவளையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். கம்பீரமான அவரது தோற்றமும் பால் வடியும் முகமும் அவளைத் தன்னை மறந்த நிலையில் நிற்கச் செய்தன.

அந்தச் சமயத்திலேதான் பெரியவர் கண்களைத் திறந்தார். இந்த எதிர் பாராத காட்சி அவரை அதிரும்படி செய்யாவிட்டாலும் சிந்திக்கத் தூண்டியது. சிறு நேரம்

☆ பெண்ணே ஆணைப் படைத்து வளர்ப்பவள்; பெண்ணே ஆணை ஆட்கொண்டு வாழ்பவள். உலக நடவடிக்கைகளில் பெண்களும் முழுப் பங்கேற்று உழைத்தாலன்று உலகம் ஒரு நாளும் முன்னேற்றமடைய முடியாது.
— பெர்னுட்ஷா

☆ நாட்டில் ஆண் பெண் சம உமை நிரந்தரமாக ஏற்பட வேண்டுமானுல் பெண்கள் விடா முயற்சியுடன் சேவை செய்து வர வேண்டும். — எட்லி

☆ பெண்கள் கணவன்மாரை, யாரும் இல்லாத போது தோழனுக நடத்த வேண்டும்; மற்றவர்கள் முன்னிலையில் ஒப்பற்ற தலைவனுக நடத்த வேண்டும். — மு. வ.

☆ இளந்தமிழன் ☆

வரை அவர்கள் இருவரையும் 'மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தவர் 'அப்பனே இவள் யார்?' என்று கேட்டார். இளையவர் பதில் சொல்லவில்லை. ஆனால் அவள் திரும்பி நின்று பேசினாள். 'சுவாமி தாங்கள் வரப் பெற்றதனால் பெரிய பாக்கியசாலியானவள் இவள்'

அவர் மௌனமாக இருந்தபடி அவளை உற்றுப் பார்த்தார். அப்போதும் அவளே தொடர்ந்து பேசினாள்: 'சுவாமி, ஏதோ புண்ணிய வசத்தால்தான் இங்கே தங்கி இந்த இடத்தைப் புனிதமாக்கி விட்டீர்கள். கொஞ்சம் எழுந்து உள்ளே வருகிறீர்களா?'

அவள் நிலத்தில் விழுந்து வணங்கினாள். பெரியவர் கையை மேலே தூக்கி உயர்த்தி ஆசீர்வதித்தார். மற்றவரோ சும்மா இருந்தபடியே இருந்தார். அப்பொழுது அவள் கண்கள் இருவரையும் மாறி மாறி மன்றாடின.

அவள் யாசித்ததை நிராகரிக்க அவர் விரும்பவில்லை. உடனே எழுந்து அந்த வீட்டை நோக்கி நடந்தார். அவர்கள் உள்ளே நுழையும் முன்பே அவள் ஓடிச் சென்று ஆசனங்களை இழுத்து விட்டு 'உட்காருங்கள்' என்று வணங்கி நின்றாள், இருந்தவர் மற்றவரையும் உட்காரும்படி சமிக்ஞை செய்து விட்டு எல்லாப் பக்கங்களையும் ஒரு முறை பார்த்தார். திடீர் என்று அவரது முகத்தில் சொல்ல முடியாத ஒரு வித வெறுப்பின் நிழல் படிந்தது.

அவள் இதை உணர்ந்ததும் மிகுந்த பணிவுடன் பேச ஆரம்பித்தாள். 'சுவாமி பாவிகளுக்கு ஒரு நாளும் விமோசனம் கிடைக்காதா?'...

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும் கருணை நிறைந்த கண்களால் அவளைப் பார்த்து நீயும் 'உட்கார்' என்று ஓர் ஆசனத்தைக் காண்பித்தார். அவள் உட்கார விரும்பவில்லை. மேலும் ஒரு புறமாக ஒதுங்கி நின்றாள்.

பெரியவர் பேசினார்: 'தவறு செய்தவர் தாமாகவே அதை உணர்ந்து பச்சாத்தாபப்படுவதே மிகச் சிறந்த பிராயச்சித்தமாகும்'

'சுவாமி என்னைப் போன்றவர்களுக்கும் இந்த விதி பொருந்துமா?'

இப்பொழுது தெளிவான குரலில் பதில் கேட்டது: 'குழந்தாய் உனக்குத்தான் இது முற்றும் பொருந்தும். வாழ்க்கை எல்லோருக்கும் எப்போதுமே நிதானமான பாதையில் செல்வதில்லை. மனம் சந்தர்ப்ப வசத்தால் பல தடவைகளில் குழியில் தள்ளி விடுகிறது. குழந்தை நடக்கப் பழகும் போது எத்தனை தடவை விழுந்து விழுந்து எழும்புகிறான் என்பதை நீ அறிவாயா?'

'மறுபடியும் எழுந்திருக்க முடியாதபடி விழுந்து விட்டால்?' பெருமூச்சின் நடுவே அவள் இப்படிக் கேட்டாள்.

அவர் ஒரு மாதிரி சிரித்தபடியே பதில் சொன்னார். 'குழந்தையின் மானிடத் தாய் அல்லவே லோகநாயகி'

அவள் ஓடி வந்து அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். மற்றவரோ எல்லாவற்றையும் கவனித்தபடியே பின்னால் உட்கார்ந்திருந்தார்.

பிறகு அவள் பெரியவரைப் பார்த்து 'சுவாமி ஒரு பொழுதிற்காவது இங்கே தங்கிச் செல்ல வேண்டும்' என்று வேண்டிக் கொண்டு உள்ளே போனுள். அப்பொழுது அவர் மற்றவரைப் பார்த்துச் சொன்னுர்: 'அப்பனே எழுந்திரு போக வேண்டும்'

ஒருவர் பின் ஒருவராக அவர்கள் வெளியே சென்றுர்கள். அவள் ஓடி வந்து பார்த்தபோது அந்தத் தெருவையே விட்டு அவர்கள் மறைந்து விட்டார்கள்.

(3)

எதிர் பாராத வகையில் பெரியவர் வேகமாக நடந்தார். அவரது மனம் நிலை கொள்ளாது தடுமாறியது. அந்த நிலையிலும் 'ஏன் இது?' என்று தமக்குள்ளே கேட்டுப் பார்த்தார். காரணம் தெரியவில்லை.

அங்கே நுழைந்தாயே அதனுல்த்தான்.

இது அவர் உள்ளத்தின் ஒரு கோணத்தில் இருந்து எழுந்த குரல். பாவத்தின் பயங்கர அந்தகாரம் சூழ்ந்த இந்த உலகத்தில் அவள் அப்படி ஓர் ஆகாத பண்டமா?... உள்ளே இருந்து மற்றொரு குரல் இப்படிக் கேட்டது. பின்னுல் தொடர்ந்து வரும் மற்றவரை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு அவர் மறுபடியும் முன் போலவே நடக்க ஆரம்பித்தார். இப்படிச் சிக்கலான மன நிலை அவரை முன்னும் சில சமயங்களில் கலங்கச் செய்ததுண்டு. அப்போது எல்லாம் அவர் அதற்கு உரிய காரணங்களை நன்ருகத் தெரிந்து கொண்டிருந்தார். இன்று அது முடியவில்லை. விரும்பி முயன்றும் அது வெளி வர மறுத்தது.

அவர் முகத்தில் லேசாக வேர்வை அரும்பியது. தமக்குள் பேசிக் கொண்டே நடந்தார். 'இந்த உலகத்தில் இருந்து விடுபட்ட வாழ்வில் எத்தனையோ வருடங்கள் கழிந்து விட்டன. நித்திரை, உணவு என்ற இன்றியமையாதவற்றையே கட்டுப்படுத்தி மனதையடக்கி வழி நடத்தினேன். எத்தனை சோதனைகளை செய்து பார்த்து ஆகிற்று! எல்லாவற்றிலும் சித்தி நிலை சாகக் கிட்டியது. இன்றோ இது பெரிய புதிராகவே இருக்கிறது. அடி மனத்தில் எங்கோ ஒரு மூலையில் என் சக்திக்கு எட்டாத ஆழத்தில் ஏதோ ஒன்று அமுக்கி கிடக்கியது.

ஒரு பெரு மூச்சுடன் திரும்பிப் பார்த்தார். இளையவரது முகம் வழக்கம் போலவே பிரகாசத்துடன் விளங்கியது.

'குழந்தாய்!...'

அந்தக் குரலில் அன்பு அமுதாகி கடலாகி பொங்கி வழிந்தது.

'சுவாமி!' என்று உடனே பதிலுக்குக் குரல் கொடுத்தார் மற்றவர்.

'களைப்படைந்தாயோ என்று பார்த்தேன். அவ்வளவு தான்'

மறுபடியும் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக நடந்தார்கள். அவர்களுக்கு நடுவே மௌனம் நிலைத்து இருந்தது. கொஞ்சத் தூரம் சென்றதும் தெருவின் ஓரத்தில் நின்ற மரத்தின் நிழலில் அவர் போய் உட்கார்ந்தார். இளையவரும் அவரைத் தொடர்ந்து சென்று ஒரு பக்கத்தில் ஒதுங்கினுர்.

பெரியவருடைய மனதில் மற்றவரைப் பற்றிய நினைவுகள் திடீர் என்று முளைத்தன. உடனே அவர் கேட்டார்: 'குழந்தாய், நீ என்னை அடைந்து பன்னிரெண்டு ஆண்டுகள் ஆகி

விட்டன இல்லையா?'

'ஆம்!' என்று தலையை அசைத்தார் இளையவர்.

'இதுவும் ஒரு வகையில் நம்மைப் பாதிக்கக் கூடிய பந்தந்தானே? இதை நீ உணரவில்லையா?'

மற்றவர் பதில் இன்றி மௌனத்தில் மூழ்கினர்.

'உனக்குப் பக்குவ நிலை வந்து விட்டது. இனியும் நீ என் இறக்கைக்குள் உறங்க வேண்டியதில்லை'

இளையவர் பிறகும் பேச்சு இன்றியே இருந்தார். சிறிது பொறுத்து பெரியவரே பேசினர்.

'அப்பனே! இனி நீயும் நானும் பிரிந்து விட வேண்டும், அல்லது இரண்டு பேருமே பெரிய நஷ்டத்தை அடைவோம்'

இளையவர் எழுந்து கூப்பிய கரங்களுடன் அவர் பக்கமாகச் சென்று விழுந்து வணங்கினர்.

'குழந்தாய் உன்னை ஆண்டவன் ஆசீர்வதிப்பானாக'

அவர் கண்களை மூடியபடி எழுந்து நின்றார். அவருடைய குரல் கரகரத்தது. மற்றவர் குனிந்து அவருடைய பாதங்களைத் தொட்டு கண்களில ஒற்றிக் கொண்டு தெருவில் இறங்கினர்.

## (4)

தெருவில் இறங்கிய இளையவர் ஒரு முறை கூடத் திரும்பிப் பாராமலே நடந்து கொண்டிருந்தார். அவரது நடையில் எது இல்லா விட்டாலும் நிதானம் இருந்தது. எல்லாவற்றிலும் இருந்தும் விடுபட்ட தெளிவு இருந்தது.

அந்த உருவம் கண்களை விட்டு மறையும் வரையும் நின்றபடியே பார்த்துக் கொண்டு நின்ற பெரியவர் தாய் போல் மாறி 'ஐயோ! வெய்யில் கடுமையாக எரிக்கிறதே!' என்று அங்லாகித்தார்: பிறகு தாமும் தொடர்ந்து போக எண்ணியவர் போல அந்தத் திசையில் வேகமாக நடந்தார். சிறிது தூரம் சென்றதும் ஏனே மறுபடியும் திரும்பி வந்து அந்த மரத்தின் கீழ் உட்கார்ந்தார்.

இளையவர் இருந்த இடம் சூனியமாகிக் கிடந்தது. ஆனல் மண்ணில் அவர் காலடிகள் நன்ருகத் தெரியும்படி பதிந்திருந்தன. அந்த அடையாளங்கள் ஏதோ அருமையான பொக்கிஷங்கள் போல அவருக்கு இருந்தன. வெகு நேரம் வரையில் அவற்றையே பார்த்துக் கொண்டிருந்தார், அதில் ஏதோ இருப்பது போலப்பட்டது. நடுவில் இனி ஒரு போதும் சந்திக்க மாட்டேனு?' என்று கேள்வி எழுந்ததும் தடுமாறி எழுந்து நின்று அவர் போன திசையைப் பார்த்தார். பிறகு அங்குமிங்குமாக நடக்க ஆரம்பித்தார். அப்போது எல்லாம் அந்த அடையாளங்கள் அழிந்து விடாதபடி விலகி விலகியே நடக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

இந்தப் பாசம் இவ்வளவு தூரம் என்னைப் பாதித்து விட்டதே என்ற ஏக்கமும் அவருக்கு அடிக்கடி உண்டாயிற்று,

அன்றைக்கே அவன் வந்தபோது, 'இது வேண்டாம் மறுபடியும் கட்டுப்படாதே' என்று எச்சரித்த என் அந்தராத்மாவின் குரலை நான் கௌரவிக்கவில்லை. 'சுவாமி எனக்கு வழி காட்டுங்கள்' என்று வந்தவனை எப்படித்தான் 'போ' என்று தள்ள முடியும் வா என்று ஏற்றுக் கொண்டேன். அவன் நிழலாகி வளர்ந்தான். இந்த நிலையிலும் அவனைப் பார்த்து மனம் களித்தான். ஆனல் இன்று?

அவர் நீண்ட ஒரு பெருமூச்சுடன் கிளம்பி வந்த வழியாக நடந்தார். இப்பொழுது அவரது நடையில் வேகம் இல்லை

நிதானமும் இருக்கவில்லை, தகித்துக் கொண்டிருந்த வெய்யில் கூட அவரை அவசரப் படுத்தவில்லை. மெல்ல மெல்ல ஊர்ந்து சென்ருர். பாரம் ஏறிய மன நிலையை முகம் எடுத்துக் காட்டியது.

வழியில் சனங்கள் போனுர்கள். வந்தார்கள். அவர்களுக்குள் அவனும் இருக்கலாம் என்பது போல அவர் கண்கள் எல்லோரையும் ஆராய்ந்தன. 'இனி வேண்டாம்' என்பது போல அவர் கண்களை மூடிக் கொண்டும் நடந்தார்.

வர, வர அவருக்கு நடக்கவே பெரிய சிரமமாக இருந்தது. ஆயினும் நிற்காமலே நடந்து சென்ருர். அந்த சமயத்திலேயே காலையில் தான் எந்த வீட்டில் இருந்து கிளம்பி ஓடினுரோ அந்த வீட்டின் எதிரில் வந்து விட்டதை தெரிந்து கொண்டார். நடப்பதை நிறுத்தி விட்டு அந்த மரத்தின் அடியில் இருந்த மேடையைப் பார்த்தார். எதிரில் 'சுவாமி வாருங்கள்' என்று வேண்டியவாறு அவள் ஓடி வந்தாள். அவர் இப்பொழுது அசையவில்லை. கண்களை அகல விழித்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். பின் தாமாகவே இறங்கி உள்ளே சென்ருர்.

மற்றவரைப் பிரிந்ததனுல் உண்டாகிய தாகம் மெல்ல தணிவது போல அவருக்குப் பட்டது.

அப்பொழுது அவள் பேசினுள்.: 'சுவாமி எப்படியும் ஒரு நாளைக்கு உங்களை சந்திப்பேன் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனுல் இன்றைக்கே சித்தியாகும் என்று எண்ணவே இல்லை. நான் பெரிய பாக்கியம் செய்தவள்'

'அம்மா இது ஜன்மாந்தரங்களின் தொடர்பாகவும் இருக்கலாம் அல்லவா? உன்னுடைய இடத்தில் எப்படியோ எனக்கும் ஆறுதல் உண்டாகிறது'.

அவர் உள்ளே புகுந்து ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தார்.

'சுவாமி மறுபடியும் போய் விட மாட்டீர்களே?'

அவள் உண்மையாகவே கேட்டாள்.

'போ என்று தள்ளினுலும் முடியாத நிலையில் இப்பொழுது இருக்கிறேன்'

காலில் விழுந்து வணங்கியவள் எழுந்து உள்ளே சென்ருள். அவர் அதற்குள் அதிலேயே அமர்ந்து தூங்கி விட்டார். அவர் கண்களைத் திறந்த போது முற்றும் எதிர் பாராத தோற்றத்தில் அவள் எதிரில் நின்ருள்.

'அம்மா இதுஎன்ன கோலம்?'

அவர் ஆச்சரியத்தோடு கேட்டார்'

அவள் இதற்குப் பதில் சொல்லாமலே தன் கருத்தைச் சொன்னுள்: 'சுவாமி இவையெல்லாம் இனி தங்களைச் சேர்ந்தவையே, விருப்பம் எதுவோ அப்படிச் செய்யுங்கள்'

அவர் அதிர்ந்து போய் சோர்வடைந்த கண்களை உயர்த்தி அவளைப் பார்த்தார்.

அதற்குள் அவள் வெளி இறங்கி நடந்து கொண்டிருந்தாள். ●

—எஸ். சிவா

---

பெண் பலவிதத்தில் ஆணைவிடச் சிறந்தவள். தன்னலப் பற்றே இல்லாது, பொறுமையாக, அன்பாக, தாயாக, தாதியாக, கொடையாளியாக, மற்றவர்களுக்காக வருந்துவதற்காக; பெண்ணுடன் ஆண் ஒருபோதும் சமமாக நிற்கமாட்டான். அவளது இதயத்திலிருந்து வெளிப்படும் அன்பும் இவ்வுலகத்தில் அவளுடைய தொழிலாகிய உற்பத்தியும் ஆணை விட அவளை எவ்வளவோ உயர்த்திக் காட்டுகிறது.

— லாலா லஜபதிராய்


①



# பல்லா
# பல்லா


④

⑤


## கவிஞரது கலைவிழா காட்சிகள்

1. ஆசிரியை திருமதி சரோஜினி கைலாசபிள்ளை அவர்களின் வரவேற்புரையும், விழாவிற்குத் தலைமை
ஆனந்தராஜன் அவர்களுக்கு ஆசிரியரின் இளைய மகன் 'மதனன்' மாலை அணிவித்து கௌரவிக்கும் காட்சி
உரை. 3. பேராசிரியர் ஐம்புலிங்கம் (தமிழகம்) அவர்களின் பாராட்டுரை. 4. விழாவிற்கு வருகை தந்த
காதல்' (மாணிக்கப் பிரசுரம்) நாவலாசிரியர் செங்கை ஆழியானின் சிறப்புரை. 6. செல்வன் சிவ

1



2



3



# பல்லாண்டு பல்லாண்டு



5



# பல்லாயிரம் ஆண்டு

6 விழா விபரங்கள் உள்ளே...



வற்புரையும், விழாவிற்குத் தலைமை தாங்கிய பிரபல கண் வைத்திய நிபுணர் டாக்டர் திரு. சோ.
மாலை அணிவித்து கௌரவிக்கும் காட்சியும். 2. டாக்டர் திரு. சோ. ஆனந்தராஜனின் தலைமை
ட்டுரை. 4. விழாவிற்கு வருகை தந்திருந்த பொது மக்களில் ஒரு பகுதியினர். 5. 'கொத்தியின்
னின் சிறப்புரை. 6. செல்வன் சிவனடியான் சிவபாலனின் புல்லாங்குழல்.

# மனத்திரை

நாம் தெருவழியே நடக்கிறோம். வயது போன அனாதை கிழமொன்று அசிங்க மான தோற்றத்தோடு கவனிப்பாரற்று பாதையில் மயங்கிக்கிடக்கிறாள்.

நாம் அந்தகிழவியைப் போய்த் தூக்கி உதவி செய்தால் எம்மைப்பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள். கிழவி என்ன கீழ்ச் சாதியை சேர்ந்தவளோ, நாம் அணிந்திருக் கும் உடுப்பிற்கு மரியாதை குறைந்து விடு மோ என்பன போன்ற வீணான சிந்தனை கள் எம் உள்ளத்தை தாக்கி விடுவதா லேயே நாம் பேசாமல் எம் வழியே நடந்து விடுகிறோம். இதிலிருந்து என்ன தெரிகிறது. ஏதோ ஒரு சமூகப் பயம் எங் களை ஆட்டிப்படைக்கிறது. நாம் உணர்ந்த வற்றை செய்யாமல் இப்படி ஏன் போலி யாக நடந்து கொள்கிறோம். எங்களால் இந்த முறையிற் சமுதாய அமைப்பை அதன் போலிச்சுவர்களை எதிர்ப்பதற்கும் பயம். எங்களை இந்த சமூகம் ஒதுக்கி விடு மோ என்ற வீண் பிரமை எங்களிடையே விடம் போல் வளர்ந்து விட்டது, பின்... நாங்கள் எப்படியப்பா சுதந்திரமானவர் கள் என்று பீற்றிக் கொள்ளமுடியும்...?

**சாந்தி ஓடிவிட்டாள்**

*—க. அருள் சுப்பிரமணியம்*

தம்பிக்கு பொறுப்பு மிகுதியான பிற கும் அவனைத் தன்கீழ் வைத்து உரிமை கொடுக்காமல் வாழச்செய்கின்ற மனமும் உண்டு. எல்லாம் அன்புதான் காரணம். அன்பும் ஓர் உணர்வுதானே! அறிவு என் னும் வழிகாட்டி இல்லாதபோது, மற்ற உணர்வுகளைப்போல் அந்த அன்பும் கேடு விளைக்கும் அல்லவா? நல்ல உலகம்! முன் னே அமைந்த உறவு. அதனால் அமைந்த பண்பு, இவற்றை என்றும்அழி யாமல் காக்க விரும்புகிறது. மனம் தன் வளர்ச்சிக்கு தானே முட்டுக்கட்டை இட்டுக் கொள்கிறது. மனிதனாக வளர வேண்டும் என்று உலகம்அழைக்கின்றது. வற்புறுத்து கின்றது, உதவவும் உதவுகின்றது. ஆகை யால், பெற்றோர் முன் மகனாக இருந்து கொண்டே வளர்ச்சி குன்றி சாவது நீதியா? பெற்றோர்களுக்கு உதவு, ஆனால் அதற்காகநீ உயர்ச்சி பெறாமல் தாழ்ந்து நலிவதா? பெற்றோர்க்கு உரிய உதவியும் வேறு, இரண்டும் போற்றலே வாழ்க்கை.

**"கள்ளோ காவியமோ"**

*—டாக்டர் மு. வரதராசன்*

உனக்கு வாழ்க்கைத் துணைவியைத் தேடும் போது அழகோ, அறிவோ முதல் தேவையாக இருக்கவேண்டியதில்லை. குணம்தான் முதல்தேவையாக இருக்க வேண்டும். ஒரு நாள் கண்டு குலாவுகிற உறவுக்கு-விபசார நட்புக்கு வேண்டு மானால் அழகு கட்டாயம் தேவையாக இருக்கலாம். ஆனால் வாழ்க்கை முழுவ தும் துணைவருகின்ற துணை விக்கு அன்பும், குணமும். அவசியந் தேவை!

மனித வாழ்வின் ஜீவநதியே அன்பு தான். வாழ்க்கையின் வற்றாத ஜீவநதி அது. ஆனால் நிலையற்ற உடலழகில் ஏற் படும் ஆசைக்கு பெயர் அன்பல்ல,

தசைவடிவில் கொள்ளும் மோகத்திற்கு பெயர் அன்பல்ல. புனிதமான இரண்டு உள்ளங்கள் ஒன்றை யொன்று புரிந்து கொள்ளும் பண்பின் சங்கமத்தில் பரிமளி ப்பதே அன்பு. அதில் மயக்கம் இருக்காது. மகத்துவம் இருக்கும்.

**"புஸ்பம்"**

*—எஸ். எஸ். நாதன்*

*—தொகுப்பு:- செல்வி-அ சத்தியவதி*

# தெரிந்த பெயர்கள் தெரியாத விபரங்கள்

● நீங்கள் கோழிகளைப் பார்த்து இருப்பீர்கள். சாதாரணமாக கோழி ஒரு அடி உயரம் இருக்கும். சேவல் இரண்டு அடி உயரம் வரை இருக்கும். ஆனல் 8 அடி உயரமுள்ள அதிசயக்கோழி பார்த்து இருக்கிறீர்களா, ஆபிரிக்காவில் உள்ள நெருப்புக் கோழி தான் அந்த அதிசயக் கோழி. ஆண் நெருப்புக்கோழி சாதாரணமாக 8 அடி உயரம் வளர்ந்திருக்கும். நெருப்புக் கோழியின் முட்டை சாதாரண கோழி முட்டையை விட 18 மடங்கு பெரியது. ஒரு முட்டை வேக சுமார் 40 நிமிடங்கள் ஆகும்.

● "க்றீன்லாந்து" என்ற பெயர் அத்தேசத்திற்கு வரக் காரணம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அங்கே சூரிய ஒளி மங்கலான பச்சை நிறமாகத் தெரிகிறதாம், இதனுலேயே இந்நாட்டுக்கு (Green-பச்சை) "க்றீன் லாந்து" எனப் பெயரிடப் பட்டதாம்.

● இரவு நேரத்தில் வானத்திலிருந்து திடீரென்று நட்சத்திரம் போன்ற ஒரு பொருள் கீழே விழும். பலர் அதை "நட்சத்திரம் விழுகிறது" எனக் கூறுகிறுர்களல்லவா? ஆனுல், அது உண்மையில் நட்சத்திரம் அல்ல; அதற்கு 'எரிகல்' என்று பெயர். வான வெளியில் கணக்கற்ற கற்கள் இருக்கின்றன. இவை காந்த சக்தியால் இழுக்கப் பட்டு, நாலாபுறமும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

தொகுப்பு : மலையகச் செல்வி.
ஸெய்தூன்பிறம்ளான்'

'விகட கவி' என்ற பதத்தை முதலிலிருந்து சொன்னுலும் 'விகட கவிதான்' கடைசியிலிருந்து சொன்னுலும் 'விகட கவிதான் என்பதை அனைவரும் அறிவீர்கள். இது தமிழில். ஆங்கிலத்தில்...? இங்கும் ஒரு நீண்ட வார்த்தை இருக்கிறது. அது:-

ABLE WAS I. I SAW ELBA

இதில் ஒரு விஷேசம் என்ன வென்றுல்; இந்த வார்த்தை உலகப்புகழ் பெற்ற மாவீரன் நெப்போலியன் தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் கூறியது.

ABLE WAS I. I SAW ELBA

# மூன்று கவிதைகள்

## ஊருக்குத்தான்...

சீதனம் வாங்காதீர்
சீரழிவடையாதீர்
என.........
மேடைக்கு மேடை
கூப்பாடு போடுபவர்
தன்னிடம் வந்தவரிடம்
ஐம்பதினுயிரத்தில்
ஐந்து சதம் குறைந்தாலும்
உன் பெண்ணை ஏற்கேன்
என் றிரைந்தார்.

—நெல்லை நடேஸ்

## பழமை திரும்புகிறது

வலப்பக்கத்தில்
ஓர் அங்குல உச்சியுடன்
தலைமயிரை - தோள்வரை
வளர்த்திருந்த பையனைப்பார்த்து,
அவன் பாட்டனுர்
"தம்பி, இது உனக்கு
நல்லாயிருக்கோ ?"
எனத் தலையாட்டிக் கேட்டபோது
அவர் குடுமி - குலைந்து
அவர் தோளைத்தட்டியது

—து. நாகேந்திரா

## விளையாட்டு

கொடித்தினமன்று
நான்
கொண்டு சென்ற
குவளையை
'உருட்டி' விளையாடியவர்
சம்பளத் தினமன்று
போத்தலும் கையுமாய்
பாதையில்
உருண்டு விளையாடினுர்

— பொன்கை-தாசன்



## கே. எஸ். ஆனந்தன்

**(4)**

முன்னிரவு கடந்து பின்னிரவு முற்றி வரும் வேளை. விதவைக் கோலம் பூண்ட இளம் பெண்ணின் முகம்போல வெளிறிச் சிறுத்திருந்த தேய்பிறைச் சந்திரன் கீழ் வானில் சோம்பலாக தலை தூக்கியிருந்தான்.

அந்த நடுச் சாம வேளையில் இராசரட்டை அரண்மனைக்கு நெடுந் தொலைவு வடக்கே சிங்கை நகருக்குச் செல்லும் சாலையின் தென் புறத்தில் உள்ள ஓர் பௌத்த விகாரத்துக்குள் காலடி எடுத்து வைத்தான் தாதுசேன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்தில் காலடி எடுத்து வைத்த பௌத்தமதம் நன்கு வேரூன்றிய விருட்சம் போல பலரையும் கவர்ந்து கலந்திருந்தது. பௌத்த பள்ளிகளில் பௌத்த சந்நியாசிகள் மிகவும் தீவிரமாகவும், அதே வேளையில் பக்குவமாகவும் பொது மக்களைக் கவரும் வகையில் பணியாற்றி வந்தனர்.

இராசரட்டையை வெற்றி கொண்ட பின்பு எங்கெங்கு பௌத்த பள்ளிகள் உண்டோ அங்கங்கு எல்லாம் சென்று அந்தப் பள்ளியின் தலைவரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றதுடன் சில வாக்குறுதிகளும் அளித்து வந்தான் தாதுசேன. அதே போன்று இரவுவேளை நெடு நேரம் சென்ற பின்பு அந்தப் பௌத்த பள்ளியைத் தேடிக் கொண்டு வந்திருந்தான்.

களைப்பும் சோர்வுமாக விகாரத்தின் முன் மண்டபத்தில் காலடி எடுத்து வைத்த தாதுசேன பௌத்த பள்ளியின் முன் தூணில் பொருத்தியிருந்த நெய் விளக்கின் துணை கொண்டு உள்ளே யாராவது இருக்கின்றார்களா என்று நோக்கினன். அந்த விளக்கின் மங்கலான ஒளி முன் மண்டபத்தில் மட்டுமே நிழலாகியிருந்தது. மற்றப் பகுதிகளெல்லாம் இருளில் புதைந்திருந்தன.

பாண்டியர்களுடைய படையெடுப்புக்குப்பின் ஈழ நாட்டில் இராசரட்டைப் பகுதியில் உள்ள பௌத்த பள்ளிகளும், மற்றக் கோயில்களும் எவ்வளவு சீர் கெட்டுப் போயிருக்கின்றன என்பதற்கு அவன் சென்ற இடங்களெல்லாம் சாட்சி பகர்ந்து கொண்டிருந்தன. மதப் பற்றில்லாத மன்னர்களா அவர்கள்? இல்லையே — மறப் பணியிலும் அறப்பணிக்கு அள்ளி வழங்கிய வள்ளல்கள் மரபுதித்தவர்களாச்சே. அப்படிப்பட்டவர்கள் பதவிக்காக கலகங்களிலீடுபட்டு அதனால் அறவழி மறந்து ஒழுகியதால் ஏற்பட்ட பலன் தர்ம நிலையங்களும், மத வழிபாட்டு ஸ்தலங்களும் எவ்வளவு தூரம் சீரழிக்கப்பட்டதென்று தெரியாமலே வாழ்ந்திருக்கின்றூர்கள். இவற்றையெல்லாம் எண்ணிக் கண்ணீர் சிந்தினுன் தாதுசேனு.

வெற்றி கொள்ள வேண்டும் என்ற வெறி ஓங்கி நின்ற போதெல்லாம் அது பற்றி அவன் நினைத்துப் பார்க்கவில்லை. பௌத்த சந்நியாசிகள் கூறிய தர்ம உபதேசங்கள் தூசியாகத் தோன்றின. ஆனுல் தனது குறிக்கோள் நிறைவு பெற்றதும் கடந்த காலத்தையும் கண்ணெதிரே தோன்றும் சீரழிந்த காட்சிகளையும் சேர்த்துப் பார்த்து இரத்தக் கண்ணீர் சிந்தினுன். வெற்றியைக் கொண்டாட முடியவில்லை அவனுல். வெற்றியின் நடுவே தன் இதயத்தை தானே நசுக்கிக் கொண்டது போன்ற உணர்ச்சி. அவன் ஆத்மா அழுதது. விக்கலெடுத்து பொருமி அழுதான் அந்த வீரன். அவனுடைய அழுகை ஒலி கேட்டு எழுந்து வந்த அந்தப் பௌத்த விகாரத்து தலைவரான தர்மரத்ன தேரோ 'யாரப்பா அழுகிறது? என்ன துன்பம் நேர்ந்தது. இங்கே வா' என்று நெய்விளக்கின் ஒளியருகில் வந்து நின்றூர்.


## "மாணிக்கம் சந்தா விபரம்"

(தபாற் செலவு உட்பட)

**இலங்கை**

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | ரூபா | 15.00 |
| ஆறு மாதச் சந்தா | ரூபா | 7.50 |

**இந்தியா**

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | ரூபா | 17.00 |
| ஆறுமாதச் சந்தா | ரூபா | 8.50 |

**மலேசியா**

| | |
|---|---|
| வருடச் சந்தா | 10 டாலர் |
| ஆறு மாதச் சந்தா | 5 டாலர் |


அவருடைய ஆதரவான வார்த்தையைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தான் தாதுசேனு. சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க அந்த உருவத்தின் அமைதியான தோற்றம் அவன் மனத்தை கவர்ந்திழுக்க 'சுவாமி தங்கள் தூக்கத்தைக் கெடுத்து விட்டேன் போலும். மன்னிக்க வேண்டும்' என்றுன் தாதுசேனு.

'ஆபத்து வேளையில் உதவுவது கஷ்டமல்ல. நீ யாரப்பா?'

'நான்தான் தாதுசேனு'

'தாதுசேனனு! புரட்சிப்படையின் தலைவனல்லவா? அக்கிரமங்களின் துணைவனல்லவா? இங்கே உனக்கு என்ன வேண்டும்?'

'சுவாமி' என்று கண்ணீர் சிந்தினுன் தாதுசேனன். பெரும்பாலும் இராசரட்டை மக்கள் அவனை ஒரு கொள்ளைக்காரனுகவே கருதினர். ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக இராசரட்டையைக் கலக்கி அடித்த அவனை நல்லவனுக யார்தான் மதிக்க முடியும்? நம்ப முடியும்?

'என்ன வேண்டி இங்கு வந்தாய்? பதவிக்காகஆசைப்பட்டு ஆயிரமாயிரம் உயிர்களை ஐந்து வருடங்களுக்கு மேலாகக் கொன்று குவித்த பாவியல்லவா நீ? பௌத்த விகாரத்தில் உனக்கு என்னப்பா வேலை? நான் கேட்பதற்கு பதில் சொல்லேன்' என்றார் தர்மரத்தின தேரோ. தருமத்துக்கு மட்டுமே பயந்த அவர் எதையும் நேருக்கு நேர் கேட்டு வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று முடிவு செய்து விடுவார்.

தாதுசேனன் அவர் பாதங்களில் வீழ்ந்து கண்ணீர் சொரிந்தான். அவர் மௌனமேயுருவாய் நின்றிந்தார். இதற்கிடையில் உள்ளேயிருந்த இரு இளம் துறவிகள் ஒரு நெய் விளக்கின் உதவியுடன் அங்கே வந்து சேர்ந்து விட்டனர். தர்மரத்தின தேரோவுக்கு பின்புறமாக அவர்கள் நின்றிருந்தனர் 'சுவாமி என் வாழ்க்கையின் வரலாற்றைத் தாங்கள் புரிந்து கொள்ளாது பேசி விட்டீர்கள். ஊர் மக்கள் பெரும்பாலும் இதே கொள்கையுடன்தானிருக்கிறார்கள் போலும். நான் கொலைகாரனல்ல. கொள்ளைக்காரனல்ல. இலட்சிய உரிமைக்காக போரிடுவது குற்றமல்லவென்றே போரிட்டேன். ஆனால் என் மீது பழியைப் போட்டுப் பலர் ஏழை மக்களைக் கொள்ளையிட்டும் சூறையாடியும் வந்ததை இப்போதானுணர்கின்றேன். என்னைப் பற்றி உலாவும் தீய்கதைகளைப் போக்குவதற்கு என்னாலானவற்றைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன். என்னை ஆசீர்வதியுங்கள். என்று வேண்டினான்.

இராசரட்டையின் மன்னனாகி விட்ட ஒருவன் அப்படிக் கூறியதைக் கேட்டதும் உண்மையை ஓரளவு அறிய முற்பட்டார் தர்மரத்தினதேரோ. நாட்டுக்கு நன்மை செய்பவன் எவனையும் அவர் நல்லவனாகவே கருதினார். கடமை — கண்ணியம் — கட்டுப்பாட்டுடன் வாழும் ஒழுக்க சீலர்களையே தர்மரத்தின தேரோ மதித்து வரவேற்றார். தாதுசேனா பற்றி மக்களிடையே நிலவிய அபிப்பிராயங்களையும், அவன் மீது பழியைச் சுமத்திக் கொள்ளையர்கள் செய்த கொடூரங்களையும் அவர் உணர்ந்து கொண்ட போதே தாதுசேனாவை மன்னித்து விட்டார். அரசியல் நெறிக்குட்பட்ட கொள்கை பற்றி அவர் அறிந்திருந்தாராயினும் அரசியலோடு தனது அறப்பணியை இணைந்து

## வேல் காட்டும் பாதை



அழகன் முருகன் கையில் வைத்துக் கொண்டிருக்கும் வேலின் அர்த்தம் என்ன? அது வெறும் ஆயுதம்தானா? வேலிருக்கப் பயமேன் என்பார்களே! அதன் அர்த்தம் என்ன? நமக்கு கஷ்டம் வரும்போது முருகன் வேலினால் காப்பான் என்பதா? இல்லை. முருகனின் கையிலுள்ள வேலினைப் பாருங்கள். அதனை அடி முதல் நுனி வரை உற்று நோக்குங்கள். ஏதாவது தெரிகிறதா?

ஆமாம். அந்த வேலினைப் போல் எமது அறிவு இருக்க வேண்டுமாம். நல்ல கூர்மையாக, ஆழமாக, அகலமாக எமது அறிவு இருக்க வேண்டும் என உணர்த்துகிறது இந்த வேல். வேல் போல் அறிவு இருந்தால் கஷ்டம் ஏன் ஏற்படுகிறது? அப்படி ஏற்பட்டாலும் அறிவால் அக் கஷ்டத்தைப் போக்க முடியாதா? வேலிருக்கப் பயம் தான் ஏன்?

விட விரும்பாததினாலேயே ஒதுங்கி வாழ முனைந்தார். அந்த நடுச்சாம வேளையில்தான் பிடித்துக் கொண்ட நாட்டின் நிலையை அறியும் பொருட்டு ஒவ்வோரிடமாகத் திரிந்து அலைந்து வரும் தாதுசேனனையும், அவன் உள்ளத்தின் நல் நோக்கையும் நினைத்துக் கொண்ட துறவி அவனது முதுகை அன்புடன் வருடி விட்டார். அவன் பேருவகை அடைந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினான்.

'தாதுசேனரே தங்கள் நிலையறி ஏதேதோ கூறித் தங்கள் மனதைப் யாது புண் படுத்தியமைக்காக மன்னிக்க வேண்டும்' என்றார் துறவி.

'அடிகளார் என்னை ஆசீர்வதித்து நான் செய்த எல்லாவற்றையும் மன்னிக்க வேண்டும்' என்றான்.

பின்னர் பகற் பொழுதில் ஒரு நாளைக்கு அந்த விகாரத்துக்கு விஜயம்



பாண்டியர்களிடமிருந்து இராசரட்டை அரியணையைக் கைப்பற்றிய பின் பாண்டியர்களது ஆட்சியின் கீழ் சீர்குலைந்து போயிருந்த பௌத்த விகாரைகளை சீர்திருத்தும் நோக்கோடு ஒவ்வொரு விகாரைகளுக்கும் நேரடியாக விஜயம் செய்து அதன் நிலைமைகளை அறிந்து வருகிறான் தாதுசேனன்.

அதே சமயத்தில் அவனது வேண்டுகோளின்படி அவனது நம்பிக்கைக்குப்பாத்திரமான கீர்த்தி இரு சிவிகைகளில் தாதுசேனனின் மனைவியையும் மக்களையும் இராசரட்டைக்கு அழைத்து வருகிறான்.

செய்வதாகக் கூறி விட்டு தர்மரத்தின துறவியிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு நடந்தான் தாதுசேனு. அவன் மனதில் தேங்கியிருந்த கவலை கள் சிறிது சிறிதாக நீங்குவது போன்று மனம் நிம்மதி வசமாகிக் கொண்டு வந்தது.

● ☆ ●

பூசைக்குத் தொகுத்த புனித மலர்த் தொடை போன்று பல்லக்கி னுள் அமர்ந்திருந்த நந்தா தன் மன [illegible] வான ரதத்தில் ஏற்றிப் பல்வேறு இ[illegible] இறக்கை கட்டிப் பறக்க விட்டிருந்தாள். அந்த இனிய பயணம் அவள் மனதில் அத்தனை மகிழ்ச்சியை ஊட்டியது.

முதல் நாள் அந்தியில் ஆரம்பித்த பயணம் மறுநாட் காலை கீழ் வானப் பொய்கையில் கதிரவன் மலர்ந்து சில நாழிகைப் பொழுதாகும் வரை இராச ரட்டை எல்லையைக் கடந்திருந்தது. ஒன்றன் பின் ஒன்ருக இரு பல்லக்குகள் உருகுணையிலிருந்து இராசரட்டை போகும் பெருஞ்சாலையில் விரைந்து கொண்டிருந்தது. சிவிகை தாங்கிகளை விட காவலர்கள் சிலர் சிவிகைக்கு முன் னும் பின்னும் சென்று கொண்டிருந்த னர். அவர்களுக்கு மேலதிகாரியாக ஓர் இளம் வாலிபன் புரவியில் அமர்ந்து சென்று கொண்டிருந்தான். அவன் வேறு யாருமல்ல தாதுசேனுவின் நம் பிக்கைக்குப் பாத்திரமான கீர்த்தியே தான்.

மக்களையும் மனைவியையும் உரு குணையிலிருந்து அழைத்து வரும் பொறுப்பைக் கீர்த்தியிடம் விட்டிருந் தான் தாதுசேனு. அவர்களை அழைத்து வரும் பொருட்டு உருகுணைக்குச் சென்ற கீர்த்தி, நந்தா நீராடச் சென்று விட் டாள் என அறிந்து ஆற்றுக்குச் சென் ருன். அங்கே அவள் நின்ற கோலம் அவனைத் தடுமாற வைத்து விட்டிருந் தது. அவள் எழிலார்ந்த மேனியை கண் இமைக்காது பார்த்துக் கொண்டு நின்று விட்டான். அதே வேளையில் தாதுசேனுவின் மனைவி மகளைத் தேடி வந்து குரல் கொடுக்கவே அவன் குதி ரையுடன் மறைந்து விட்டிருந்தான். நந்தா தாயுடன் சேர்ந்து வீட்டுக்குச் சென்ற போதும் அந்தச் சுந்தர 'வாலிப னுடைய நினைவாகவே சென்ருள். அவள் அங்கு சென்ற சமயம் அவன் தன் வீட்டிலிருப்பதைப் பார்த்து விய ந்து போனுள் நந்தா. பின்பு தாயிடமி ருந்து விடயத்தை அறிந்த போது அவள் உள்ளம் மகிழ்ச்சிப் பெருக்கால் விம்மிற்று.

இரவோடிரவாக பயணத்தைத் தொடர்ந்திருந்தனர். தோற்று ஓடிய மன்னனும் அவனது ஆட்களில் சிலரும் மறைந்திருந்து எங்காவது புரட்சியி லீடுபடக் கூடும் என்பதனுலேயே இரவி லேயே காட்டு வழிப் பயணத்தை வைத்துக் கொண்டான் கீர்த்தி. ஒரு பல்லக்கில் நந்தாவும் அவள் தம்பி காசியப்பாவும் மறு பல்லக்கில் தாயும் மூத்தவனை மூகலானும் இருந்தனர். விடியும் வேளை இராசரட்டை எல்லைக் குள் பல்லக்குகள் வந்து விட்டிருந்தன.

காலை இளஞ்சூரியன் ஆயிரமாயி ரம் பொற்கதிர் இதழ்களை விரித்து வீசி யவாறு மெள்ள மெள்ள மேலேறிக் கொண்டிருந்த வேளையில் வனப்பும் விசாலமுமாக அமைந்த இராசரட் டைப் பெருஞ்சாலையில் ஓட்டமும் நடையுமாக விரைந்த பல்லக்குத் தூக் கிகளின் காலில் அணிந்திருந்த இரும் புத் தண்டைக் காப்புகளும் ஈட்டியின் வளையங்களும் ஜல் ஜல் என ஒலி எழுப் பிக் கொண்டிருந்தன.

காலை இளங்காற்றிலும், பொன் னெளிப் பூச்சிலும் படபடத்துப் பள பளத்த சிவிகையின் பட்டுத் திரையை உள்ளிருந்து நீண்ட ஓர் அழகிய பூங் கரம் மெல்ல விலக்கிப் பிடித்தது. வாளிப்பான பசுந்தண்டில் அழகாக இதழ் விரித்து மலர்ந்து நிற்கும் பவள மல்லிகை மலர் போல விளங்கிய கரத் தின் மேலே சுழன்ருடும் கருவண்டுக ளென விழிகள் சென்ற திசையில் பல் லக்கை நோக்கி புழுதியைக் கிளப்பிக் கிளப்பிக் கொண்டு வரும் புரவியைக் கண்டு திகைத்தாள் நந்தா.

(வளரும்)

## மாணிக்கம் மதனன் குறுக்கெழுத்துப் போட்டி இல. 7

# பரிசு ரூபா 100/-

## முடிவுத் திகதி 30-6-75

### இங்கு 'மாணிக்கம்' 'மதனன்' குறுக்கெழுத்துப் போட்டி இல. 7 படிவத்தைப் பிரசுரித்துள்ளோம்.

இப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் இங்கு பிரசுரமாகியிருக்கும் குறுக்கெழுத்துப்போட்டி படிவத்திலேயே நிரப்பி அனுப்ப வேண்டும். அது மட்டுமல்லாமல் இப்படிவத்துடன் ரூ. 1/ பெறுமதியான தபால் தலைகளும் அனுப்ப வேண்டும். இப்போட்டியில் தபாற் தலைகள் அனுப்பிப் பங்கு பெறுவோருக்கு மாணிக்கம் 'மதனன்' பிரதி ஒன்று இலவசமாக அனுப்பி வைக்கப்படும். பிரசுரமாகியிருக்கும் குறுக்கெழுத்துப் போட்டிப் படிவமும் ரூபா 1/- பெறுமதியான தபாற்தலைகளும் இணைக்காமல் வரும் போட்டிப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும் ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் ரூ. 1/- பெறுமதியான தபாற் தலைகள் இணைக்கப்பட வேண்டும்.



பெயர்:..........................................

விலாசம்..........................................

..........................................

தங்களுக்குத் தேவையான மாத இதழ்..........................................

# பரிசு ரூபா 100/-

**முக்கிய குறிப்பு:**

நீங்கள் அனுப்பும் ரூ. 1/- பெறுமதியான தபாற் தலைகள் 'மாணிக்கம்' 'மதனன்' பிரதி ஒன்றுக்கும், அதை அனுப்பும் தபாற் செலவுக்குமேயல்லாமல் குறுக்கெழுத்துப்போட்டிக்கான பிரவேசப் பணமல்ல.

இப் போட்டியில் பங்கு பற்றுபவர்களுக்கு எம்மிடம் எஞ்சியுள்ள பிரதிகளே அனுப்பி வைக்கப்படும். எது காரணம் கொண்டும் புதிய பிரதிகள் அனுப்பி வைக்கப்படமாட்டாது. புதிய பிரதிகளை எதிர் பார்த்து இப்போட்டியில் எவராவது பங்குபற்ற நினைப்பார்களேயானால் அவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற வேண்டாமென தயவு கூர்ந்து கேட்டுக் கொள்ளுகின்றோம். தாங்கள் விரும்பும் இதழின் மாதத்தை தங்கள் பெயர் விலாசத்தின் கீழ்உள்ள இடத்தில் குறிப்பிட்டு அனுப்பினால் எமக்கு மிக உதவியாயிருக்கும்.

இப்போட்டியில் ஒன்றுக்குமேல் சரியான விடைகள் எமக்குக் கிடைக்கும் பட்சத்தில் பரிசுத்தொகை முதல் பத்து அதிர்ஷ்டசாலிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இப்போட்டி பற்றிய சகல முடிவுகளும் ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. போட்டிப்பிரவேசப் பத்திரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி.

'மாணிக்கம்' 'மதனன்' குறுக்கெழுத்துப் போட்டி இல.- 7

மே/பா. 'மாணிக்கம்' 29, கல்யாணி வீதி, கொழும்பு-6.

## குறுக்கெழுத்துப் போட்டி இல - 7 புதிர்

**இடமிருந்து வலம் :**

1. ஆறுமுகக் கடவுள்.
4. ஒரு சிறுவர் மாத சஞ்சிகை.
6. பெற்றவர்களுக்குப் பெண்பிள்ளை.
7. இலகுவில் புரிய மறுக்கும் ஒன்றின் பெயர்.
9. எதையும் ரசிக்கும் தன்மை படைத்தவன்.
10. நிறுத்து.
11. நித்திரை.
12. ஒரு இராசியின் பெயர்.
14. நடனங்கள் ஆடும்போதும், பாடல்கள் பாடும்போதும் "இது" பிடித்து செய்ய வேண்டும்.
15. சூரியனின் ஒளிக்கற்றைகளுக்கு இப்படியும் ஒரு பெயர்.
18. மகாபாரதக் கொடைவள்ளல். ஒரு எழுத்துக் குறைகிறது.
19. உலகில் நடப்பவைகள் யாவும் அவன் திரு.........
20. இந்தியாவிலுள்ள ஒரு ஊரின் பெயர்.
21. கவனம்.
22. கவலை. இங்கு மாறிக்கிடக்கிறது.

## மேலிருந்து கீழ்

1. சமாதானம்.
2. சொல்லக் கூடாதது.
3. திருடன். இங்கு மாறிக்கிடப்பதுடன் ஒரு எழுத்தில் ஒரு புள்ளி குறைகிறது.
4. புத்தி.
5. விவாதம்.
7. வார நாட்களில் ஒன்று.
8. பிச்சை......போது பாத்திரமறிந்துபோடல் வேண்டும்.
10. கற்க, கற்பவை கசடறக் கற்க, கற்றபின் நிற்க அதற்குத்......
13. நரகத்திற்கு எதிர்ச் சொல்.
14. கஷ்டம் உண்டாகும்போது தனக்குத்தானே சொல்லிக் கொள்ளும் சமாதானம்.
15. ஒரு பெண்ணிற்குத் திருமணமானபின் அவளுக்குத் துணையாய் ஆகுபவன்.
16. பிறருக்காக எதையும்விட்டுக் கொடுத்தால் அதற்குப் பெயர்.
17. வனம்.
18. பெண்களின் அணிகலன்.



நம்முடைய அறிவும், செல்வமும், ஆற்றலும் பிறருடைய நலனுக்காக ஆண்டவன் நம்மிடம் ஒப்படைத்த ஒரு சொத்து.

ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசத்தையும் வெறுப்பையும் ஒதுக்கினால் அன்பு தழைக்கும். அதுதான் அஹிம்ஸையின் முக்கிய அம்சம்.

சத்தியத்திலும் நேர்மையிலும் சமுதாய வளர்ச்சியிலும் அக்கறையுடைய சமூக ஊழியர்களால் தான் மக்களுக்கு கடமையுணர்ச்சியைப் போதிக்க முடியும்.

தாழ்மை உணர்ச்சியையும் வெறுப்பையும் உதறிவிட்டு உழைப்பின் மேன்மையை உணர்ந்து செயலாற்றும் ஒருவனே உலகில் உண்மையான தொழிலாளி.

— மகாத்மா காந்தி —

நாடு எமக்கு என்ன செய்யும் என நினைக்குமுன்னம் நாட்டுக்கு உன் சேவை என்ன?

— எமர்சன் —



உன் நாக்கால் பிறர் மனதைப் புண்படுத்தாதே. பிறர் நாக்கு உன் மனதை ஒன்றும் செய்யாது என நம்பு.

அன்போடு பேசி இணங்கி நட. என்றும் ஆணவத்தோடு பேசிக் காலம் கழிக்காதே. — டாக்டர் மு. வ. —

தொகுப்பு:
இராஜேஸ்வரி பொன்னுத்துரை.

# மணல்

மழை பெய்து பாதையில் சேறு தங்கி போவோர் வருவோர்க்கெல்லாம் பெரிய சிரமத்தை தந்துகொண்டிருந்தது.

அதன்மேல் ஒரு சிறுவன் மணலைத் தூவிக்கொண்டிருந்தான். இதனைக் கண்ட ஒரு பெரியவர் "அப்பா" இது தான் புண்ணியம்" என்று சொன்னார்.

அதற்கு உடனே அந்த சிறுவன் "ஐயா இது புண்ணியமல்ல. மணல்" என்றான்.



ஆதாரம்: 1929ம் ஆண்டின் ஒரு சஞ்சிகை.

நவரசம்

**ஹசனுல் முபாறக்** கல்முனை-4.

● வைகாசி-ஆனி, மாணிக்கத்தைப் படிக்க படிக்க அலுப்பை உண்டாக்காத சுவையான சிறுகதைகள், சிரிப்பையூட்டும் ஜோக்குகள். வாசகர்களுக்கு முன்னேற்றத்தைக் கொடுக்கும் அழகான கட்டுரைகள் இன்னும் நவரசம் மிக அழகாக இருந்தது. மாணிக்க களஞ்சியத்துக்கு நிச்சயம் என்னைப் போன்ற வாசக அபிமானிகள் உதவியளிப்பர்.

மாணிக்கத்தை என்னால் என்றுமே மறக்க முடியாது.

## பரிகாரம் வேண்டும்

**எம். ஏ. ஐ. எச். மொஹிதீன்**
நானு ஓயா

● தங்கள் வைகாசி/ஆனி 75 'மாணிக்கம்' இதழில் 'அரசினர் கவனிப்பார்களா? என்ற தலைப்பின் கீழ் ஈழத்துப் பத்திரிகைகளின், முக்கியமாக 'மாணிக்கம்' படும் பாட்டினையும் அதன் கஷ்டத்தையும் மிகவும் உருக்கமாக எடுத்துக் கூறி இருக்கின்றீர்கள் நன்றி.

## நன்றி

**வீ. கே. மோகன்ராஜ்** பசறை.

● மாணிக்கம் வைகாசி ஆனி இதழ்களை வெளியிட்டதைப் பற்றி சந்தோஷம், ஆனால் வருகிற ஆடி இதழைக் காணாமல் என்னால் இருக்க முடியாது. காரணம் நான் விரும்பி வாங்குவதே மாணிக்கப் பிரசுரங்கள்தான். வைகாசி ஆனி இதழைப்பார்த்தவுடன் குமுதமா அல்லது மாணிக்கமா? என்று திகைத்து விட்டேன் பிரமாதம் அட்டைப்பட ஓவியம். ஓவியர் 'ஸ்ரீகாந்' துக்கு நன்றிகள்.

## அட்டை அழகு

**செல்வி க. வசந்தகௌரி**
கொழும்பு-12.

● மாணிக்கத்தின் அட்டையில், சிறுகதை, அல்லது தொடர்கதை போன்றவற்றின் சம்பவங்களைக் கொண்ட படங்கள் பிரசுரமாவது நன்று எனினும் தலைப்பினை அட்டையில் பிரசுரிப்பது நன்றல்ல. சஞ்சிகையின் அட்டையில் சஞ்சிகையின் பெருக்கு மட்டும் இடம் அளித்தால் என்ன? அட்டைப் படம் பற்றி மாணிக்கத்தின் உள்ளே பிரசுரிக்கலாமே!

## மாணிக்கக் களஞ்சியம்

**மருதூர்வாணன்.** மருதமுனை

● ஆனிமாத மாணிக்கம் வாங்கிப் படித்தேன், மாணிக்கக் களஞ்சியம்' வெளியீடப் போவது கண்டு வரவேற்கிறேன், மகிழ்ச்சியடைகிறேன், நடுநிலை வகுத்து சர்ச்சைக்குக் ,களம்' கொடுப்பது கண்டு, மாணிக்கம் நல்ல சேவை ஆற்றி வருகிறது. மெச்சத் தகுந்த புனித சேவையாகும்.

## மாணிக்கம்

**எஸ், மகுரூப்** கிண்ணியா-2.

● மாணிக்க வாசகர்களில் நானும் ஒருவன் எனக்கு மாணிக்கம் கையில் கிடைத்து விட்டால்



# மாணிக்க மடல்கள்

ஓர் உண்மையான மாணிக்கக் கல்லை பெற்றது போன்ற உணர்வு ஏற்படுவது மட்டுமல்லாமல் என்னை சிறுகதை, எழுதவும் தூண்டுவதுடன் எழுத்துலகிலும் நுழையவிட்டு விடுகிறது மாணிக்கத்துக்கு எப்படி 'நன்றி' சொல்வதென்றே புரியவில்லை

## ரங்கராட்டினம்

**மா. குகனேஷ்** இனிகத்ஹேனை.

● மாதம் ஒருமுறைவந்து என் மனத்தைக் கவரும் என் மாணிக்கமே !

உன் அங்கங்கள் அனைத்தையுமே சுவைக்கும் வாசகன் நான்! சென்றமுறை நீ தந்த ரங்கராட்டின 'தத்துவங்கள் என்ன, இன்னும் நீ தந்த ஐடியாக்கள் என்ன சிந்தனைகள் என்ன, தேன் கூடு என்ன, எல்லாமே பலே ஜோர்.

## சிரஞ்சீவி

**தோப்பூர் டலீல்** பேராதனை.

● சித்திரைமாதத்தின் மாணிக்கம் கிடைக்கப் பெற்றேன். ''வண்ணஅட்டையுடனும் வளமான விடயங்களுடனும் நிறைவுற வெளிவந்திருந்தது' வீறுநடைபோடும், இலக்கிய பூர்வமான யதார்த்தபூர்வமான கதைகளுக்கு என்னுரிமையளிப்பதற்காக மாணிக்கத்தை வாழ்த்தவேண்டும் ஈழத்துத் தமிழ் இலக்கியப்பணியில் மாணிக்கம்' என்றுமே சிரஞ்சீவியாக இருக்கட்டும்.'

# மாணிக்கக் கழகம்

நாடெங்கிலும் விரிவான முறையில் நிறுவப்பட்டு வரும் 'மாணிக்கக் கழகம்' சம்பந்தமாக விளக்கம் கேட்டு எமக்குத் தினந்தோறும் பல கடிதங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

இவைகளுக்கெல்லாம் உடனுக்குடன் பதில் அனுப்பிவருகிறோம். ''மாணிக்கக் கழகம்' நிறுவவிரும்பும் வாசக அன்பர்கள் நிபந்தனைகளை பெற்றுக் கொள்ள 'நிர்வாகி, மாணிக்கக் கழகம், 29, கல்யாணி வீதி, கொழும்பு-6 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

● *அக்குறனை, புளுகொஹாதென்னை பகுதியில் நிறுவப்பட்டுள்ள எமது 'மாணிக்கக் கழக' உறுப்பினர்களின் பெயர்கள் இங்கே பிரசுரமாகின்றன.*

## அக்குறனை, புளுகொஹதென்னை மாணிக்கக் கழக நிர்வாகக்குழு உறுப்பினர்கள்:

தலைவர்: எம்.எச்.எம். அலிரிஸாய் உபதலைவர்: ஏ. ஸி. எம். ராசிக், கௌ. காரியதரிசி: ஜனாப்: எஸ். ஏ. எம் பாரூக், உப-செயலாளர்: எவ். எஸ். ஏ. ரசாக், தனாதிகாரி: எல். எஸ். எம். இஸ்மாயில், போஷகர்கள்: ஜனாப்: எச். எம். பஷீர் (அதிபர்), டாக்டர் எச். எம். மஹ்ரூப் (அக்குறனை கல்விச் சபைத்தலைவர்) எஸ். எல். எம். சுபைர் (ஜே. பி.)

இளம் எழுத்தாளர் குழு: புளு கஹதென்னை எஸ். ஏ. எம். பாரூக், அக்குறனை அலிரிஸாப், ஏஸியெம் ருஸிக், செல்வி எவ். இனுயா, ஜெஸீமா ஸாலி, ரஸாக் ஏ. இஸ்மாயில், ஐ. எல். எஸ். ஆப்தீன், நூலக பொறுப்பாளர்கள்: எஸ். எச். எம். அக்பர் ஐ. எல். எஸ். ஆப்தீன்.

அக்குறனை மாணிக்கக் கழக அலுவலக முகவரி: செயலாளர், அக்குறனை மாணிக்கக் கழகம், இல. 468, புளுகொஹதென்னை, க/பட்டுகொட.

---

## சில துணுக்குகள்...

● இருபத்தி நான்கு மணிநேரத்தில் எமது இதயம் 13,689 தடவை துடிக்கின்றது. வருடம் முழுவதும் சுமார் 3 கோடி தடவை துடிக்கின்றது.

● கலிலியோ எனும் விஞ்ஞானி சூரியனில் உள்ள கருமை நிறப்புள்ளிகளைப்பற்றி முதலில் உலகிற்குத் தெரிவித்தார்.

● ''கதக்'' என்பது வட - இந்திய நாட்டிய வகைகளுள் ஒன்றாகும்.

● 8நிமிடம் 16.6செக்கனில்சூரியனில் இருந்து ஒளிக் கதிர்கள் பூமியை அடைகின்றன.

● 'ஜோன் கிளான்' என்பவர் விண் வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கராகும்.

● ஈழத்தின் முதல் தமிழ்ப் பத்திரிகையின் பெயர் ''உதய தாரகை''

—எம். ஐ. எம். அஜ்வாட்

# சொல்லத்தான் நினைக்கிறோம்

நல்ல நூல்களை பிரசுரிப்பதால் நாம் மக்களுக்குச் செய்யும் அறிவுத் தொண்டு நிறைவுபெற்று விடாது. அப்படி வெளியிடப்படும் நூல்கள் பொது மக்களுக்கு எவ்விதம் தூய நெறிகளைப் போதிக்கின்றன என்பதனை உணர்ந்து செயலாற்றுவதில்தான் ஒருபிரசுர கர்த்தாவின் – பெருமை தெளிவாக விளங்குகிறது. அதுவேபெரும் புகழாக நிலைக்கிறது·விரிவானமுறையில் அந்த நூல்களின் கருத்துக்கள் நாடெங்கிலும் பரவி மக்களின் அறிவு வளர்ச்சிக்கு விருந்தாகின்றன''

கடந்த 1975 பங்குனி மாத மாணிக்கத்தில் பிரசுரமான 'சொல்லத்தான் நினைக்கிறோம்' பகுதியில் வரும் இந்த அங்கத்தை மட்டும் மீண்டும் ஒருமுறை உங்களுக்கு ஞாபகமூட்டும் வண்ணம் இங்கு பிரசுரிக்கிறோம்.

காரணம்........

நூல் வெளியீட்டுத் துறையில் நாம் அடைந்து வரும் பரவலான வெற்றிகளுக்கு எமது மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் உறுதுணை புரிகின்றன. வாசகர்களின் அறிவு வளர்ச்சி ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் எமக்கு உதவி வரும் இன்னொருசக்தி மிக்கசாதனம் உங்களனைவரினதும்,ஒத்துழைப்பே' அன்றி வேறல்ல... விடாமுயற்சிகளின் பிரதிபலிப்புகளும் உங்களது ஆக்கபூர்வமான உறுதுணையும் எம்மை 'இலக்கிய சேவை' எனும் இன்பக்கடலினுள் பல வந்தமாக தள்ளுகின்றன. அங்கு கரை புரண்டோடும் இல்க்கிய வெள்ளத்தில் கரை தேடாது நீந்திக் களிக்கின்றோம். அங்கெல்லாம் வாழுன்ற மீன்கள் இனம் கூட 'எங்களையெல்லாம் ஒரு கதாபாத்திரமாக்கி கதைவடிவாய் நாவல் வடிவாய் வெளியிடல் ஆகாதா? என்று வினுதொடுக்கின்றன. சாதாரண பேய்களை வைத்து நவீனம் வெளியிட்ட தாங்கள் எங்களையும் ஒரு இலக்கியக் கண் கொண்டு நோக்கக் கூடாதா? என்று ஏங்கித்தவிக்கின்றன.

'சாதாரணப் பேய்கள்' என்று மேலே குறிப்பிடப்பட்டிருப்பதை சற்று அவதானியுங்கள. சாதாரணப் பேய்களா அவை...? அவைகள். அறிவு மயமானவை: விந்தையானவை வேடிக்கையானவை; 'காதலாகி கசிந்து கண்ணீர் மல்கியவை' விசித்திரம் மிகுந்த அந்தப் பேய்களின் வரலாறு இன்று நாட்டில் வாழுகின்ற எத்தனையோ சந்தர்ப்ப வாதிகளுக்கு ஒரு நல் வழிகாட்டி. தூங்கி விழும் ஒரு துடிப்பற்ற சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சி தரும் நல்ல கதாபாத்திரங்கள். சமுதாயத்து மரபுகளிலே முளைத்திருக்கும் புல்லுருவிகளை களைந்தெறியும் கருத்துள்ள வடிவங்கள்.

இந்த உருவங்கள் அனைத்தும் எங்கிருக்கின்றன என்று கேட்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் இன்னும் 'கொத்தியின் காதல்' வாங்கவில்லை போலிருக்கிறது. இப்போது இலக்கிய வட்டத்துள்ளே பரபரப்பான வரவேற்பினைப் பெற்று நாடெங்கிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கும் மாணிக்கப் பிரசுரத்தினரின் மூன்றாவது வெளியீடுதான் பிரபல நாவலாசிரியர் 'செங்கை ஆழியானின்' யதார்த்தப் படைப்பான 'கொத்தியின் காதல்' இந்தநாவலிலேதான் நாம் மேற்குறிப்பிட்ட அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. இவை மட்டுமா...? இன்றைய இளம் தலைமுறையினரின் ஏக்கப் பெருமூச்சுக்களை யதார்த்த ரீதியில் இனம் கண்டு அவைகளுக்கு விடிவு வழங்கும் போதனைகளும் நிறைந்துள்ளன.

வருவோரையெல்லாம் வரவேற்று உபசரிக்கும் எமது தமிழ் குலத்திலும் வாழுகின்ற கோடாரிக்காம்புகளைப் பொது மேடையில் அழைத்து பகிரங்கப்படுத்தும் சீர்திருத்தநோக்கம் கொண்ட இந்த நகைச்சுவை நவீனத்தின் விலை 3-40 மட்டுமே. இந்த நவீனத்திற்கு நீங்களெல்லாம் தரும் வரவேற்பே எமது அடுத்த நவீனத்தின் வெற்றி வெளியீட்டிற்கு திறவுகோல் என்பதை மகிழ்ச்சியோடு சொல்ல விரும்புகிறோம்.

# மக்களும்?! மாணிக்கமும்

திலீப் நவாஸ், நிந்தவூர்.

கே. தனது அந்தரங்கக் கவலைகளை அடுத்தவர் ஒருவரிடம் ஆத்ம திருப்திக்காக அவிழ்த்துவிடும் முறை சிறந்தது என நீங்கள் நினைக்கிறீர்களா?

ப. கவலைகளை வைத்து தனக்குத் தானே நொந்துகொள்வதில் அர்த்தம் இல்லை. தனக்கு வேண்டிய ஒருவரிடம் அதனைக்கூறி ஆலோசனைகள் கேட்டால் எமது கவலைகள் ஓரளவாவது தீரும். இது 'ஆத்ம திருப்திக்காக' என்று எண்ணுவது தவறான அபிப்பிராயம்.

கே. சரஸ்வதி, புதுவிளாங்குளம்.

கே. தற்போதைய நாகரீகத்தில் ஆண், பெண் என்று வேறுபாடு காண உதவுவது எது?

ப. பெயர்களைத் தவிர வேறு விதத்தில் அடையாளம் காண்பது சற்றுக் கடினம் தான். அதாவது உங்கள் கேள்வி சம்பந்தப்பட்டவர்கள் வரையில்...

சோலைக்குயில் ஹஸனி, கல்முனை.

கே. குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம் இவைகளில் இன்பம் மிகுந்த பருவம் எது?

ப. சற்று சிக்கலான கேள்வி. ஏழைகளின் ஏதுமறியாத குழந்தைப்பருவம் இன்பமாக இருக்கிறது. நடுத்தர குடும்பத்தவர்களுக்கு முதுமைப் பருவமும் பணக்காரருக்கு வாலிபப் பருவமும் இன்பமாக இருக்கின்றன.

ஆர். கணேஷ், லத்பந்துரை.

கே. மரணம் சீக்கிரம் வரக்கூடாதா என்று விரக்தி மனப்பான்மை கொண்டு திரிபவர்களுக்கு தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?

ப. தங்களுக்குத் தாங்களாகவே தீர்மானித்துக் கொள்ளும் உறுதியற்ற முடிவுகளாலேயே விரக்தி மனப்பான்மை பிறக்கிறது. வீணான கற்பனைகளை தவிர்த்துக் கொண்டால் விரக்தி மனப்பான்மையும் அதனால் வரும் தேவையற்ற எண்ணங்களும் இருக்காது. எதையும் சாதாரணமாக எண்ணிவிடக்கூடாது. எமது பிரச்சினைகளுக்கான முடிவுகளின் பிரதிபலன்கள் எப்போதும் உறுதி கொண்டவையாகவும், தெளிவானவைகளாகவும் இருத்தல் வேண்டும். விரக்தி மனப்பான்மை தானாகவே விலகிவிடும்.

சி. கிருஷ்ணவேணி, நிந்தவூர்-5.

கே. ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றக் கன்னத்தை மாற்றிக்கொடு என்ற ஏசுபிரானே முன்வைத்த காலை பின் வையாதே என்று பைபிளில் கூறியிருக்கின்றாரே...?

ப. நீ மற்றக் கன்னத்தை திருப்பிக் கொடுப்பதன் மூலம் ஒரு முட்டாளைத் திருத்துகிறாய், முன்வைத்த காலைப் பின்வைக்காததின் மூலம் உனது வாழ்க்கையின் வெற்றியை நீ நெருங்கிக் கொண்டிருக்கிறாய் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.



ஓ கரு நிழலே!......

தன்னுள் இருக்கும் ஒரு கருமையை நோக்கி விழிக்கின்ருள். அதற்காய உருவத்தைத்தான் அவளால் கற்பிக்க முடியவில்லை. ஸ்தூல வஸ்து ஒன்றிலிருந்து புறப்படுவதுதான் நிழல் என்ருல்; அதற்காய ஸ்தூல வஸ்து தான் என்ன?...... அவள் மருண்டாள்.

விழிகளை மேலே உயர்த்தி, இறந்துபோன தன் தாயின் உருவம் தீட்டப்பட்ட ஓவியத்தை நோக்கிஞள். தந்தையைத் தெரியாது; அவள் பிறக்கும் முன்பே அவர் இறந்துவிட்டதாகத் தாய் சொல்லக் கேட்டிருக்கின்ருள். ஏஞே? அவள் தன்னுடைய தாயை நினைத்துக் கொண்டாள்.

அம்மா!...

அந்த உருவம் அவள் உள்ளத்தே பரந்து விரிந்தது. அந்த விழிகளை அன்பு மயக்கம் தரும் இனிய பார்வையை; அவளால் தான் எப்படி மறக்க முடியும். குவிந்து விரிந்த இதழ்கள். பிரசவித்துச் சென்ற அம்மா! என்ற வார்த்தை மட்டும் அவளுள் ஆயிரம் முறை ஒலித்தது. அவளாக உண்டாக்கிக் கொண்ட அந்த பாச உணர்வைத்தான் அவள் நித்தம் தியானிக்கிறுள்.

''மீனு''வென அன்பு ததும்ப அழைத்தார் சிவப்பிரகாசம். அவளின் ஒரே அண்ணன். பொதுநலத் தொண்டராகச் சில காலம் சேவையாற்றினூர். இப்போது மௌனியாகிவிட்டார். ஊர்வாயைத் திருத்த ஒருவாய் போதாதென்றெண்ணியோ? என்னமோ? இப்பொழுதெல்லாம் தன் வாயையே அடக்கிக்கொண்டார். ஏனே சில சமயங்களில் அவர் வாயும் பிரலம்பம் கண்டுவிடுகின்றது.

அந்த வான வெளியும் அதில் பறந்து செல்லும் வெண்புறுக்களுமே அவள் உள்ளத்தையீர்த்தன. ஏங்கிய விழிகளுடன் அதைப்பார்த்தாள். தன்னையும் அதனுடன் ஒப்பிட்டுக்கொண்டாள். ஏனேதான் துணையற்றுப்பறப்பது போன்று அவளுக்குத் தோன்றிற்று. அந்த துணை எங்கே?... தனக்காக வாழப்பிறந்த அந்தத்துணை...... அவள் அழவில்லை. உள்ளத்தில் முகிழ்ந்து கொண்டிருந்த துன்பத்தின் சாயல் மட்டும் அவள் வதனத்தில் படர்ந்தது. உயரப் பறந்து சென்று கொண்டிருக்கும் அந்தச் சோடிப்புறுக்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். சுழன்று கொண்டிருக்கும் பிரபஞ்சத்தில் தனி ஒருவளாகப் பரிமித்துக் கொண்டிருப்பதாக ஒரு உணர்ச்சி. சூனிய உலகமே அவள் முன் ஒளி பொருந்திய இன்பப் பிழம்பாக விரியத் தொடங்கியது. ஏங்கினுள். பின் அந்தச் சோடிப் புறுக்களைப் பார்த்தாள். தன் சாயல் அதில் மிளிர்வதாக எண்ணிஞள்.

''ஏன் அம்மா, ஏன் அப்படிப் பார்க்கிறுய்?'' குளியல் அறையை விட்டுத் திரும்பிய சிவப்பிரகாசம் கேட்டார். அவள் சிரித்தாள். வரண்டு போன புன்னகை அவள் இதழ்களில் தவழ்ந்தது.

அவருக்குக் காரணம் தெரியும். அதனுல் தான் அவர் காரணம் கேட்கவில்லை. நடந்தவை; முடிந்துவிட்டன. அதன் எண்ணங்கள், இன்பச் சுமைகள், துன்பச்சாயல் எல்லாம் ஒன்ருக இதயத்தைத் தாக்கும் போது தான் மனிதன் தடுமாறுகின்ருன். தத்தளிக்கின்ருன், தன்னையும் மறக்கின்ருன் என்பது அவர் சித்தாந்தம். அவர் படித்தவர், பலரக மனிதர்களின் உள்ளத்தைப் புரிந்து கொண்டவர். அதனுல் தன் தங்கையின் உள்ளத்தையும் புரிந்து கொண்டதாக அவருக்கு நினைப்பு.

''ஏனம்மா அழுகிருய்?''

அவர் அவளைத் தேற்ற முற்பட்டார். அவள் அவரைப் பார்த்தாள். பின் வானவெளியை நோக்கினுள். கருகிப்போன இதயத்தின் தகிப்பு மட்டும் அவள் கண்களில் பொங்கின. அவர் எது தனக்குப் புரிந்ததாக எண்ணினரோ? இன்னும் கேட்டால் இதே மௌனப் பதில்தான் கிடைக்கும் என்றெண்ணி விரைந்தார்.

தனிமை சூழ்ந்த இருள் சுமை! பொழுது மங்கி இருள் சூழ்ந்து

கொண்டது. விளக்குகளை ஏற்றவில்லை. இருளுள் எல்லையை அடைய முற்பட்டாள். இதயத்தேயும் — புறத்தேயும் இருள். எங்கும் இருள்; இயங்கும் உலகம் இருள்; அன்பற்ற மனங்கள் இருள்; பாசமற்ற அன்னையும் இருள்; அவள் தவித்தாள். அர்த்தமற்ற சிந்தனைகள் விவஸ்த்தையைத் தாண்டிக் குதித்தன. எண்ணங்கள் பறந்தன, விரைந்தன, எதையோ நோக்கித் துடுப்பற்ற படகு போல் அலைமோதியது. எங்கே?... எங்கும் இருள். தான் நின்றதை உணரவில்லை. தானும் இருளில் கரைந்து விட்டதாக எண்ணினாள். விடிவும் அதன் ஒளியும் மனிதனுக்கு அவசியம் என்பதை அவள் இப்போதுதான் உணர்ந்தாள்.

அவள் புரிந்துகொண்டாள். தன் அறையை நோக்கி ஓடினாள். வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களையெல்லாம் புரட்டினாள். எங்கே? .. "எதற்குள்ளோ அது மறைந்திருக்க வேண்டும்" என்று அவள் உள்ளம் பலமுறை இயம்பிக் கொண்டது. தன் இதயத்தை ஆய்ந்தாள், சிந்தனையைத் திட்டினாள், அடங்கிப்போன உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பினாள். ஆனால் ஒரு உணர்ச்சி மட்டும் எழவில்லை. அதையவள் மறந்துவிட்டாள்; இல்லை அது அவளை மறந்துவிட்டது. பிற ஆண்களைக் கவரும் உள்ளக் கவர்ச்சி இல்லை என்பதை உணர்ந்து அது தானாகவே அவளை விட்டுப் பிரிந்துவிட்டது.

அது அவளுக்குத் தெரியாது, தான் திருந்திவிட்ட உத்தமி என்பதை மட்டும் உணர்ந்தாள். அவள் பார்வை அறையைச் சுற்றிப் பரவியது; அங்கு மூலையில் கிடந்த காகிதக்குப்பைக்குள் அதைக் கண்டாள். பதறித் துடித்தாள். ஓடிச்சென்று அதைக் கையில் எடுத்தாள். தான் வணங்கும் தெய்வமே அதில் இருப்பது போன்று ஒரு பக்தி. கண்கள் சிந்திய கண்ணீரைத் துடைக்காமலே அதைப் பார்த்தாள்: மங்கிப்போன, வர்ணம் தீட்டப்படாத ஓவியம் என்றாலும் அது உயிர்த்துடிப்புடன் காணப்படுவது போன்றபிரமை அவளுக்கு. மார்பில் அணைத்தாள், முத்தமிட்டாள். பின் சிரித்தாள். உடலுனுள் ஒரு புத்துயிர்ப்பு பிரவாகம் எடுப்பது போன்ற உணர்ச்சி. அத்தான்... உள்ள ஆழத்தில் இருந்து எம்பிக் குதித்த வார்த்தையில் உறவு என்ற பாச நெகிழ்ச்சி இழைத்தது. ஏனோ அவள் அவனை அத்தானாகவே ஏற்றுக்கொண்டாள்.

பலரைக் காதலித்தாள். பலரால் காதலிக்கப் பட்டாள். கலிகால இளம் உள்ளங்களுக்கு அது ஒரு புரட்சி, சம உரிமை என்னும் பதத்தால் திருடப்பட்ட உணர்ச்சிக் குவியல்கள்; அது அவளுக்கு விளையாட்டு, வேடிக்கை; சிறுபிள்ளை நிலவைப் பார்த்து ஆவல் ஊறுவது போல், அவள் ஆண்களைப் பார்த்து அவாவுற்றாள். காதலித்தாள் காரணமின்றிப் பிரிந்தாள். அவள் தீட்டிய காதல் காவியத்தில் தோன்றிய கதாநாயகர்கள் தான் எத்தனை! அவர்கள் இவளைப் பிரிந்து துன்புற்றார்கள். பின் மறந்தே விட்டார்கள்.

'மைக்குழற்காடு அவிழ் சௌந்தர்ய நங்கையவள், மோகனப் புன்னகையில், சிக்கித் தவித்து தன்னையே மறந்து அவள்பால் லயித்திருப்பது போன்று அருகில் ஒரு மான். இவை இரண்டுமே அதில் தீட்டப்பெற்ற உருவங்கள். அந்த உருவ அமைப்பை ஏற்படுத்திய கோடுகள் ஒவ்வொன்றையும் அவள் நினைவாகவே தீட்டியதாக அவன் அவளிடம் கூறியிருந்தான்.

அதையும் நினைத்தாள். பெருமை தாங்க முடியவில்லை. என்றுமே இது போன்ற உணர்ச்சியை அவள் அடைந்ததில்லை.

நீண்டுகொண்டே சென்ற கேள்வித்தொடரில் ஒரு பகுதியைப் பிடித்தாள்!... அவளுக்கு எல்லாமே புரிந்துவிட்டது. நின்ருள்! எண்ணங்கள் நின்றன. வார்த்தைகள் தடுமாறி உதிர்ந்தன. எங்கோ; வெகு தூரத்தில், உள்ளத்தின் அந்திமப் பகுதியில் தகித்துக் கொண்டிருக்கும் துன்பத் தீ எங்கும் பரவி தன்னை எரித்து விடக்கூடாதா? என்று எண்ணினாள்.

வெளியே பரவிய அவலக் குரல்கள் அவளுள்ளத்தைத் தொடவில்லை. எங்கும் எழுந்து கொந்தளித்துக் கொண்டிருக்கும், அவலக் குரல்களை கூட அவள் அசட்டை செய்தாள். உணர்ச்சிகள் இறுகிப்போன உள்ளத்தை அவை தொடவில்லை தான்! ஆனுல் ஏதோ ஒன்று தன்னை உறுத்துவதை உணர்ந்தாள். உள்ளத்தில் பரவிய 'தீ' தான் உடலிலும் பரவி விட்டதாயென்ன?... ஒரு கணம் சிந்தித்தாள்; உண்மைகள் புரிய முற்பட்டன.

''வீடு எரிகின்றது...'' என்ற ஓலம் அவள் செவிப்புலனை இப்போதுதான் உறுத்திற்று.

'தீ'...!

அம்மாடி!... எத்தனை சுகம். எட்ட நின்று வீசிய கனல்தான் எத்தனை ரம்மியமாக இருக்கின்றது. அவளுக்கு எல்லாமே புரிந்துவிட்டன. சீதையின் கற்பை நிலைநாட்ட ஏற்பட்ட தீ...

சிவப்பிரகாசம் ஓடி வந்தார். வீடு எரிந்து கொண்டிருக்கும் காட்சியைக் கண்டார். ''எங்கே என் தங்கை?'' அலறியடித்துக் கொண்டு ஓடினர். அவள் சிரித்தாள். அந்தச்சிரிப்பொலி அவரை நிலைகுலையச் செய்தது.

''மீனு... இங்கே ஓடிவரா! வீடு பற்றி எறிகின்றது'' அவள் சிரித்தாள். பிடி சாம்பலாய் அவள் உடல் உதிர்ந்தது.

---

## கவிஞர்களுக்கு...

எமக்குத் தினந்தோறும் வந்து குவியும் கவிதைகள் அனைத்தையும் மாணிக்கத்தில் இடம்பெறச் செய்வது முடியாத காரியம். கவிஞர்களுக்கும் போதிய உற்சாகம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உங்கள் அபிமான ஆசிரியர் மாணிக்கப்பிரசுரமாக ''மாணிக்கக் கவிதைகள்'' என்ற தொகுப்பில் உங்கள் கவிதைகளை ஒரு புத்தகமாக வெளியிடத் தீர்மானித்துள்ளார். இது எமது இதர பிரசுரங்களைப்போல் அழகிய அமைப்பில் வெளியிடப்படும். இக்கவிதைத் தொகுப்பில் இடம் பெறும் கவிஞர்களது படங்களும் வாழ்க்கைக் குறிப்புகளும் இப்புத்தகத்திலேயே இடம் பெறும். இக்கவிதைத் தொகுப்பில் ஏறக்குறைய எழுபத்தைந்து கவிஞர்களுக்கு மட்டுமே இடமளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதுவித பாகுபாடுமின்றி பிரசுரத்திற்கேற்ற எதுகை மோனையுடன் கூடிய கவிதைகள் மட்டுமே ஒரு ஈழத்துக் கவிஞரால் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரிக்கப்படும். இதற்கான பல நிபந்தனைகளை இங்கு இடமின்மையால் பிரசுரிக்க முடியாமல் இருக்கின்றேம். இக்கவிதைத் தொகுப்பில் உங்கள் கவிதைகளும் இடம்பெற வேண்டுமென்ருல் முத்திரை ஒட்டி சுயவிலாசமிடப்பட்ட கவர் ஒன்றினை அனுப்பி நிபந்தனைகளைப் பெற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றேம்.

- மாணிக்கப் பிரசுரத்தினர்

பரபரப்புடன் விற்பனையாகிறது!




உள்ளூர் விற்ப ் யாளர்களிடம் உங்கள் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பக்கங்கள் 120 | விலை ரூபா. 3–40


---

இவ்விதழில் வெளியான கதை, கவிதை, கட்டுரை, துணுக்கு ஆகியவற்றுக்குப் படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். கதைகளைக் கூட்டி, குறைத்து திருத்திப் பிரசுரம் செய்வதற்கு ஆசிரியர் குழுவுக்குப் பூரண உரிமையுண்டு.


மதுரா பப்பிளிக்கேசன்ஸ் சார்பில் கொழும்பு - 13, ஸ்ரீ கதிரேசன் வீதியிலுள்ள மாணிக்கம் பிறிண்டர்ஸி'ல் 'மாணிக்கம்' மாத இதழை அச்சிட்டு, வெளியிடுபவர் திருமதி. சரோஜினி கைலாசபிள்ளை B.Sc. (Cey.) 29, கல்யாணி வீதி, கொழும்பு 6.

Registered as a Newspaper in Sri Lanka. 'Manickam' Tamil Monthly Magazine July



இப்பொழுது விற்பனையாகிறது!

வைகாசி - ஆனி- 75. விலை ரூபா 1/. சுவையான சிறு கதைகள், விஞ்ஞானக் கட்டுரைகள், கவிதைகள், இன்னும் எத்தனையோ சுவைமிகு அம்சங்கள் கொண்ட பல்சுவைப்